657

வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

"ரெஸாக...

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு...

THE VAKIL • TAMIL LAW MAGAZINE

"வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,

[ஆசிரியர்]

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. (இலங்கையில் 30 சதம்) வருட சந்தா ரூ. 3. டை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)
ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ. 60
டை ... அரைப் பக்கம்	ரூ. 35
டை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

தமிழில்
சட்டப் புத்தகங்கள்
"வக்கீல்" பிரசுரங்கள்

"வக்கீல்" 1953-ம் வருடம்
ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை ரூ. 3 12 0

"வக்கீல்" 1952-ம் வருடம்
ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

"வக்கீல்" 1951-ம் வருடம்
பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனாக்கள், குத்தகைப் பத்திர நமூனா, வார சாகுபடிப் பத்திர நமூனா உள்பட விளக்கம்] ரூ. 0 6 0

சரக்கு விற்பனைச் சட்டம் [The Indian Sale of Goods Act] ரூ. 1 8 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்
வி. பி. பி. கிடையாது.
அணா 8 சேர்த்து அனுப்பினால்
ரிஜிஸ்டர் தபால் மூலம்
அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S.I)

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள்:

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.
(Estd. 1925)

டிரேட் மார்க் ரிஜிஸ்டர் எச்சரிக்கை

ரிஜிஸ்டர் நெ. 85686.

மேலேகண்டுள்ள டிரேட்மார்க் கவர்மெண்டாரால் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த டிரேட் மார்க் நெ. 85686.

மதுரை கிருஷ்ணா காபி & டீ ஒர்க்ஸின் புரோப்ரைட்டர்

S. A. C, சுப்பிரமணியன் செட்டியார்,

அவர்களின் சொந்த உரிமையாகும். டி டிரேட்மார்க் அகில இந்திய அடிப்படையில் ரிஜிஸ்டர் செய்து சர்ட்பிகேட்டும் பெற்றிருப்பதால் இந்த டிரேட்மார்க் போல் யாரேனும் பெருக்கியோ, குறுக்கியோ இன்னும் மற்ற விதங்களிலோ கலரபின் இமிட்டேஷன் செய்யவோ அல்லது மேற்படியாரின் உரிமைகளை மேற்படி டிரேட்மார்க் மூலம் மீறினும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இதன் மூலம் பொது ஜனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

S. A. C. சுப்பிரமணிய செட்டியார்,
புரோப்ரைட்டர் கிருஷ்ணா காபி & டீ ஒர்க்ஸ்
டவுன்ஹால் ரோட் மதுரை.

N. B. டி டிரேட்மார்க் 8—9—1943 தேதி முதலாக M/S S. A. சிதம்பரம் செட்டியார் & சன்ஸ் பெயருக்கு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு 11—6—1951 தேதியுள்ள டிரேட்மார்க் Assignment மூலம் S. A. C. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் பெயருக்கு Subsequent புரோப்ரைட்டார் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது.

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 6 — ஆகஸ்டு 1954 — இதழ் 8

அமைதி 3

கொந்தளிப்பு 4

தோற்ற சட்சிக்காரர் 4

புதிய சட்டங்கள் 5

இந்திய வருமான வரி அவசரத் திருத்தச் சட்டம் 8

வழக்கும் தீர்ப்பும்

* இந்துப் பொதுக் குடும்பமும் மகனின் மகளுடைய திருமணச் செலவுகளும் 9

* ஜாகை—வாடகைக் கட்டுப்பாடுச் சட்ட வழக்கு. வேண்டுமென்று வாடகை கொடுக்காமலிருக்கும் குடிக்கூலிக்காரர்களைத் தான் அப்புறப்படுத்த முடியும் 10

சென்னை விவசாய வருமான வரிச சட்ட மசோதா. இப்போது காபி, தேயிலை, ரப்பர், கொய்னா, ஏலக்காய் தோட்டங்களுக்கு மட்டில் தான். 12

தொழிற்சாலைச் சட்டம் 13

கேள்வியும்—பதிலும் 17

நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், திருவாங்கூர்—கொச்சி மசோதா 20

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 22

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

187733

மலர் 6 ஆகஸ்டு 1954 இதழ் 8

அமைதி

இரண்டாவது மகாயுத்தம் நின்று சில வருடங்களானாலும், உலகத்தில் வெவ்வேறு இடங்களில் சின்னச் சின்ன யுத்தங்கள் இதுவரை நடந்து கொண்டுதான் இருந்தன. முக்கியமாக ஆசியாவில் இரண்டு இடங்களில் அதாவது கொரியாவிலும், இந்தோசைனாவிலும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. கொரியா யுத்தம் நின்று சில மாதங்களாகின்றன. இந்தோ—சைனாவில் பல வருடங்களாக நடந்து வந்த யுத்தமும் சென்ற மாதம் நின்று விட்டது. இன்று உலகில், எங்கேயும், எந்த மூலையிலும் யுத்தம் என்பது இல்லை.

இந்தோ—சைனா என்பது ஆசியாவின் ஒரு பெரிய தேசம். ஆசிய நாடுகளை எல்லாம் வெவ்வேறு ஐரோப்பிய ஜாதியினர் பிடித்துக் கொண்டு இரண்டு நூற்றாண்டுகளாக ஆண்டுவந்தனர். சென்ற மகாயுத்தத்தின் போது ஐரோப்பிய நாடுகளின் பலம் குன்றியது. இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு ஆசிய நாடுகள் பல, அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றன. ஆனால் இந்தோ—சைனாவை விட்டுவிடப் பிரெஞ்சுக்காரர்களுக்கு மனம் வரவில்லை. பிரான்சுதேசமே இரண்டு மூன்று வருடங்கள் ஜர்மானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தாலும், பிரஞ்சுக்காரர்கள் இந்தோசைனாவைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு காலத்தை ஓட்டினர். ஆனால் இந்தோசைனா மக்கள் தாங்கவில்லை. மக்கள் ஒன்று சேர்ந்து ஆயுதம் தாங்கிப் பிரஞ்சுக்காரர்களுடன் யுத்தம் செய்து இந்தோசைனாவின் வட பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நாட்டைப் பிரஞ்சுப் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு வந்தனர். நாளடைவில் மக்களுக்குக் கம்யூனிஸ்ட் சீனர்களுடைய உதவி கிட்டியது. யுத்தகளத்தில் பிரஞ்சுக்காரர்கள் படுதோல்வியடைந்து வந்தனர். இந்தேசைனாவில் நடந்துவந்த இந்த யுத்தத்தை, அன்னிய ஆட்சியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள மக்கள் நடத்தும் ஒரு யுத்தமாகவே, மற்ற ஆசிய நாடுகள் கருதின. ஆனால் அமெரிக்கர்கள் இதை அப்படி நினைக்கவில்லை. கம்யூனிஸ்டு ருஷ்யாவானது தன்னுடைய ஆதிக்கத்தையும் செல்வாக்கையும், உலகில், முக்கியமாக ஆசியாவில், பரப்புவதற்கான ஒரு யுத்தமாக இதைக் கருதினார்கள். யுத்தகளத்தில் அடிபட்டு ஓடும் பிரஞ்சுக்காரர்களுக்கு, அமெரிக்காவின் தத்துவங்களையும் கொள்கைகளையும் ஆராய்ச்சி செய்ய நேரமில்லை. 'சண்டையை நிறுத்தாதே' என்று பிதற்றிய அமெரிக்காவின் கூக்குரல் பிரான்சுதேசத்தின் காதில் விழவில்லை. "சண்டையை உடனடியாக நிறுத்திவிடுவோம், மற்ற விஷயங்களைக்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

கூடிப்பேசிக் கொள்வோம்' என்று காதுடன் அருகில் சென்று தன்னந்தனி யாக வேண்டிக்கொண்ட இந்தியாவின் இனிய சொற்கள் பிரெஞ்சு மக்களின் காதில் விழுந்தன. ஜினீவா சமாதான மானது இந்தியாவின் வெற்றி. இன்று உலகத்தில் அமைதி நிலவுவது இந்தி யாவினால்.

கொந்தளிப்பு

இன்று உலகில் யுத்தம் என்பது தாற் காலிகமாக நின்று விட்டாலும் ஒவ்வொரு தேசத்திலும் உள் நாட்டுக் கொந்தளிப்புக் கள் அதிகரிக்கும். ஒரு நாட்டிற்கும் மற் றொரு நாட்டிற்கும் நடக்கும் சண்டைக்கு 'யுத்தம்' என்று பெயர். ஒரு நாட்டுக்குள் ளேயே இருக்கும் மக்கள், பலகட்சிகளாக வும், வகுப்புக்களாகவும் தங்களை அணி வகுத்துக் கொண்டு போடும் சண்டை களுக்குக் கட்சிச் சண்டை கலகம், புரட்சி எனச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு பெயர் சூட்டப்படும். யுத்தத்தில் உபயோகிக்கப் படுவது - குண்டுகள், பீரங்கிகள், துப் பாக்கிகள் போன்ற ஆயுதங்கள். உள் நாட்டுச் சண்டைகளில் உபயோகிக்கப் படும் ஆயுதங்கள் - ஒலிபெருக்கி, துண்டு பிரசுரங்கள், அச்சகங்கள் கட்சிக்கொடி கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதம் போன்ற பலரகப்பட்ட ஆயுதங்களாகும். யுத்தத்தில் ஜயித்த நாடுதான் தோற்ற நாட்டை ஆண்டுவரும். உள் நாட்டுச் சண்டையில் ஜயிக்கும் கட்சிதான் அந் நாட்டு மக்களை ஆண்டு வரும். இரண்டும் அவரவர் பலம் குன்றுமலிருக்கும் வரை தான்.

தோற்ற கட்சிக்காரர்

ஒரு வழக்கில் நியாயாதிபதியானவர், எவ்வளவு நியாயமாகவும், பட்சபாத மின்றியும்: தீர்ப்பளித்தாலும் தோற்ற கட்சிக்காரருக்கு அது பிடிக்காது. அதைப் போலவேதான் நமது காங்கிரஸ் கட்சியும் காங்கிரஸ் சர்க்கார்களும் இருக்கின்றனர்! எப்படி எப்படி சட்ட திட்டங்கள் இயற்றப் பட வேண்டுமென்றும், சுதந்தர இந்தியா வில் ஒரு தனி மனிதனுடைய சுதந்தரங் கள் எவை எவை என்றும், அவற்றைப் பாதிக்காமல்தான் அரசாங்கமே சட்டம் இயற்றலாமென்றும், நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் வியக்தமாக இருக் கிறது. நீங்களும் நானும் எப்படி அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டிருக்கி றோமோ, அதைப்போலவேதான் இந்திய அரசாங்கங்கள் யாவும், சட்டசபைகள் யாவும், சர்க்கார் அதிகாரிகள் யாவரும் அதே அரசியல் அமைப்புச் சட்டத்திற்குட் பட்டவர்களே. சட்ட சபை அங்கத்தினர் கள் யாவரும் சேர்ந்து ஒருமிக்க உங்களு டைய ஜீவாதார உரிமையைப் பறிக்கும் சட்டம் ஒன்றை இயற்றி விட்டாலும் நீங் கள் பயப்படவேண்டியதில்லை. நீங்கள் உங் களுடைய ஹைக்கோர்ட்டுக்கோ, சுப்ரீம் கோர்ட்டுக்கோ, போய் முறையிட்டுக் கொண்டால் உங்களுடைய கட்சியையும் சர்க்காருடைய கட்சியையும் அந்நீதி மன்றங்கள் ஆராய்ந்து நியாயம் வழங்கும். ஒரு சட்டமோ, அச்சட்டத்திலுள்ள ஒரு ஷரத்தோ செல்லாதெனத் தீர்ப்பளிக்கும் அதிகாரம் அந்நீதி மன்றங்களிடையே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

நமது அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்தபிறகு இந்தியாவிலுள்ள எவ்வளவோ சட்டக்சபைகள் இயற்றிய எவ்வளவோ சட்டங்களையும் சட்ட ஷரத்துக்களையும் செல்லாதென நமது நீதி மன்றங்கள் தீர்ப்பளித்து வந்திருக் கின்றனர். இது நமது காங்கிரஸ் கட்சிக் குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவர்கள் இப்போது ஒரு முயற்சி செய்துகொண்டி ருக்கின்றனர். அதாவது இந்த நீதிமன்றங் களுக்கு இவ்வித அதிகாரத்தை அளிக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தையே மாற்றிவிடச் சதி செய்கின்றனர். பார்லிமெண்ட் சபைகளின் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களின் சம் மதத்தைப் பெற்று அரசியல் அமைப்புச் சட்டத்தையே மாற்ற இடமிருக்கிறது. ஆனால் அப்படிச் செய்வது மக்களின் சுதந்தரத்தைப் பறிப்பதாகும்; ஒரே கட்சியானது யதேச்சாதிகாரம் செய்ய இடம் கொடுப்பதாகும். நாளடைவில் ஜனநாயகமென்பது மறையும். காங்ரஸ் கட்சி அவ்விதம் செய்வதை மக்கள் ஆதரிக் கின்றனரா என்பது தெரியவேண்டும். அதற்கு வழி பொதுத் தேர்தல் ஒன்று தான்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

உயர்தரக
உணவுவகைகளுக்கும்
உளம் கனிந்த
உபசரிப்புக்கும்
குடந்தையில் சிறந்த இடம்

ஸ்ரீ வெங்கடா லாட்ஜ்
காபி & சாப்பாடு ஹோட்டல்
மடத்துத்தெரு, கும்பகோணம்

அன்பர்களைத்திருப்தி செய்வதே
எங்கள் லட்சியம்

1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

14. துன்மார்க்க வியாபார ஒழிப்புச் சட்டத் திருத்தம்.

Madras Suppression of Immoral Traffic Amendment Act 1954. (9-6-1954)

விபசாரத்தையே ஒரு வியாபாரம அல்லது தொழிலாக வைத்து நடத்துவதை ஒழிப்பதற்கான 1930-ம் வருடத்திய சென்னைச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. இச்சட்டம் வேசி விடுதிகளை (Brothels) ஒழிப்பதற்காகவும் சிறிய ஸ்திரீகளை வைத்துக் கொண்டு விபசார வியாபாரம் செய்வதை ஒழிப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டம். 18 வயதுக்குட்பட்ட ஒரு ஸ்திரீயானவள் ஒருவேசி விடுதியில் துன்மார்க்கத்திற்காக வசித்து வருவதாகவோ, அவள் அத்தொழில் நடத்தி வருவதாகவோ மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிய வந்தால், அவளை அந்த இடத்தை விட்டு அகற்றி மாஜிஸ்ட்ரேட்முன் ஆஜர் செய்ய மாஜிஸ்ட்ரேட் உத்தரவிடலாம். விசாரணை செய்வதின் பேரில் அவளுக்கு வயது 18 பூர்த்தியாக வில்லை என்று மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தோன்றினால் அவளுக்கு 21 வயது பூர்த்தியாகும் வரையிலோ அதற்குட்பட்ட காலத்திற்கோ ஒரு மீட்சி விடுதியிலோ (Rescue Home) வேறு வகை பாதுகாப்பிலோ வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அம்மாஜிஸ்ரேட் உத்தரவிடலாம். இப்படி மாஜிஸ்ட்ரேட் செய்யும் உத்தரவில் அந்த ஸ்திரீயின் வயது 18க்குட்பட்டதென்று அவர் தீர்மானித்து விட்டால் வயது விஷயத்தைப் பற்றி அப்பீலிலோ, ரிவிஷனிலோ, எவ்வித ஆட்சேபனைகளும் செய்ய முடியாதென இப்பொழுது ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. செக்ஷன் 9 என்பதும் இத்திருத்தச் சட்டத்தால் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது, அதாவது—ஒருவர், ஒரு ஸ்திரீ அல்லது சிறுமியை அவள் வேசித் தொழில் நடத்த வேண்டுமென்றோ அல்லது வேசித் தொழிலுக்காக வளர்க்கப்பட வேண்டுமென்றோ கருதி அவளை ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு போனாலும் சரி; அப்படிக் கொண்டு போக எத்தனம் செய்தாலும் சரி; அல்லது அப்படிக் கொண்டு போகும்படி செய்தாலும் சரி; அல்லது ஒரு ஸ்திரீயோ சிறுமியோ வேசித் தொழில் நடத்துவதை ஏற்பாடு செய்தாலும் அல்லது தூண்டினாலும் சரி; அல்லது அதற்கு உதவி செய்து வந்தாலும் சரி—அப்படிச் செய்பவருக்கு இரண்டு வருடம் வரையில் சிறை தண்டனையோ, ரூ. 1000 வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாமென்று செக்ஷன் 9. திருத்தப்பட்டிருக்கிறது. இக்குற்றத்தைப் பற்றி எந்த எந்த இடத்தில் விசாரணை செய்யலாமென்றும் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட காரணங்களுக்காக ஒரு ஸ்திரீ அல்லது சிறுமியானவள் கொண்டு போகப்படுகிறாளோ அந்த இடத்திலாவது; எந்த இடத்திலிருந்து கொண்டு போகப்படுகிறாளோ அந்த இடத்திலாவது அவளைக் கொண்டுபோக எந்த இடத்தில் எத்தனம் செய்யப்பட்டதோ அந்த இடத்திலாவது; அல்லது வேசித் தொழில் எங்கே நடக்கிறதோ அந்த இடத்திலாவது குற்றம் ஏற்பட்டதாக பாவிக்கப்பட்டு இந்த இடங்களில்

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக்
கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்:
ராணி ரெங்கய்யர் சன்ஸ்
கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.
பிராஞ்சு:
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

1006 மங்கி மார்க்
2066 ஸ்ரீ ஹனுமான் மார்க்
சுத்தமான சீயக்காய்த்தூள் பாக்கெட்டுகள்
கிருஷ்ண விலாஸ்
உதயகிரி விலாஸ்
வாசனை சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பதற்கு மிகச்
சிறந்தவைகள்
தயாரிப்பவர்:—
கிருஷ்ணா விலாஸ்
336, கீழ மாசிவீதி, மதுரை.
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.
M. ஏகாம்பரம் செட்டியார்,
புரோப்ரைட்டர்.

டிரேட்மார்க் பேடன்ட் & டிசைன்
ரிஜிஸ்டர் மற்றும்
காபிரைட்
விபரத்திற்கு: ரிஜிஸ்டர்
ஐ. ஸி. ஏஜன்ஸி,
225, நாயக்கர் புதுத் தெரு, :: மதுரை.

எங்கே வேண்டுமானாலும் வழக்கு தொடரப்படலாம்— என்றும் ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

15. பரம்பரை கிராம உத்தியோகச் சட்டத் திருத்தம்.

Madras Propietary Estates, Village Service and Hereditary Village offices Amendment Act (9-6-1954) 1895-ம் வருடத்திய சென்னை பரம்பரை கிராம உத்தியோகச் சட்டமும் 1894-ம் வருடத்திய எஸ்டேட் கிராம ஊழியச் சட்டமும் திருத்தப்பட்டிருக்கின்றன. ஒரு கிராம உத்தியோகஸ்தர் மீது விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதே அவரை 'சஸ்பெண்டு' செய்து வைக்கலாமென்று, அதாவது தாற்காலிகமாக அவரை வேலையை விட்டு நீக்கி வைக்கலாமென்று ஒரு புதிய ஷரத்து அச்சட்டங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதுவரை அவ்வித ஷரத்து இல்லாமலே செய்யப்பட்டிருக்கும் அவ்வித உத்தரவுகளும் சட்டபூர்வமாக செய்யப்பட்டவை என்றே பாவிக்கப்படவேண்டு மென்றும் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கின்றது.

16. குற்ருலப் பட்டன அமைப்புச் சட்டம்

Courtallam Township Act 1954. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள திருக்குற்ருலம் என்று பிரசித்தி பெற்ற ஊர் இது வரையில் ஒரு கிராம பஞ்சாயத்தாக இருந்தது. அந்த ஊரை ஒரு பட்டணமாக இச்சட்டம் அமைக்கின்றது. குற்ருலத்திற்கு இனி கிராமபஞ்சாயத்துச் சட்ட ஷரத்துக்கள் பொருந்தா. குற்ருலப் பட்டணப் பிரதேசக் கமிட்டி என்று ராஜ்ய சர்க்காரால் நியமிக்கப்படும் எட்டு நபர்கள் கொண்ட ஒரு கமிட்டியார்தான் இப்பட்டணத்தின் முனிசிபல் அலுவல்களை நிர்வாகம் செய்வார்கள். ஜில்லா முனிசிபாலிடிச் சட்டத்திலோ, விதிகளிலோ, வேறு சட்டங்களிலோ விதிகளிலோ உள்ள எந்த ஷரத்துக்களும் குற்ருலப் பட்டணத்திற்குப் பொருந்துமென்று குறிப்பிட ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த பஞ்சாயத்தின் சொத்துக்கள் இனி கமிட்டியாரைச் சேரும். பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படவேண்டிய வரி பாக்கி முதலிய தொகைகள் யாவும் இனிக் கமிட்டியாரிடம் கொடுக்கப்படவேண்டும். கமிட்டியின் அங்கத்தினரல்லாத ஒருவரை நிர்வாக அதிகாரியாக நியமிக்கவும் ராஜ்யசர்க்காருக்கு அதிகாரம் உண்டு. கமிட்டியிலுள்ள எட்டு அங்கத்தினர்களில் குறைந்தது மூன்று அங்கத்தினர்களாவது உத்தியோகப்பற்று இல்லாதவர்களாக இருக்கவேண்டும்.

17. விற்பனை வரி விதிப்பு செல்லுபடிச் சட்டம்.

Madras General Sales Tax Definition of Turn over and Validation of Assessment Act 1954, [14-7-1954) ஒரு வியாபாரியானவர் வாடிக்கைக்காரர்களிடமிருந்து வசூல் செய்யும் விற்பனை வரித் தொகைகளை அவருடைய மொத்த வியாபாரத் தொகையில் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்றும் அதற்கும் விற்பனை வரி வாங்குவது சட்ட பூர்வமானதல்ல என்று சமீபத்தில் ஹைகோர்ட்டார் ஒரு தீர்ப் பளித்தனர். அத்தீர்ப்பினால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தடுக்கும் உத்தேசத்துடன் சென்னை சட்டசபையால் இச்சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது.

இச்சட்டப்படி:—1-4-1954 தேதிக்கு முன் ஒரு வியாபாரியால் செய்யப்பட்ட விற்பனைகளில், அவர் சரக்கு வாங்குபவர்களிடம் வசூல் செய்திருக்கும் விற்பனை வரித் தொகைகளும் அவருடைய 'மொத்த வியாபாரத் தொகை'யில் சேர்ந்தவையாக கருதப்படும். மேலும் மேற்கண்ட விதம் விற்பனை வரிச்சட்டஷரத்தை அர்த்தம் செய்து கொண்டு (அதாவது வியாபாரியால் வசூல் செய்யப்பட்ட விற்பனைவரித் தொகைகளும் அவருடைய மொத்த வியாபாரத் தொகையில் சேர்ந்ததே என்று அர்த்தம் செய்து கொண்டு) விற்பனை வரி அதிகாரிகள் வரி விதித்திருப்பதும், வரி வசூல் செய்திருப்பதும், நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதும், கோர்ட்டுகளாலும் டிரிபுனல்களாலும் அவ்விதம் தீர்ப்பு அல்லது உத்தரவுகள் செய்திருப்பதும் எல்லாம் சட்டபூர்வமாக செய்யப்பட்டவைகளாக இச்சட்ட ஷரத்து ஒன்று பிரகடனம் செய்கின்றது. மேலும் இவ்விஷயத்தில் மேற்கண்டபடி அர்த்தம் செய்யாமல், வேறு விதமாக அர்த்தம் செய்து அதிகாரிகளாலும் டிரிபுனல்களாலும் செய்யப்பட்ட உத்தரவுகளும் கோர்ட்டுத் தீர்ப்புகளும், உத்தரவுகளும் கூட செல்லாதெனவும் இச்சட்டத்தால் பிரகடனம் செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் 1-4-1954க்குப் பிறகு வியாபாரிகளால் வசூல் செய்யப்படும் விற்பனை வரித் தொகைகளை அவர்களுடைய மொத்த வியாபாரத் தொகைகளில் சேர்த்துக் கொண்டு வரி விதிக்க விற்பனை வரி அதிகாரிகளுக்கு அதிகாரமில்லை.

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
Pro: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஸ்தாபிதம் 1941

ரிஜிஸ்டர் நெ. 152070

ஆறுமுகவிலாஸ் சீயக்காய் பவுடர் கம்பெனி
Pro: A. சின்னக்கனி நாடார் டோர் நிர். 7.
செம்பர் 1 போலீஸ் ஸ்டேஷன் சந்து,
மதுரை.

மூர்த்தி ஸ்டோர்
செம்பனார்கோவில்
(மாயூரம் தாலுக்கா)
எங்களிடம் புது சைகிள்களும், சைகிள் சாமான்கள், பெட்ரோமாக்ஸ் லைட் சாமான்கள், தையல் மிஷின் சாமான்கள் & கிராமபோன் சாமான்களும் விலை நயமாய் கிடைக்கும்.
சைகிள்களின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யப்படும்.
உரிமையாளர்,
T. N. ராமமூர்த்தி.

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

இந்திய வருமான வரி அவசரத் திருத்தச் சட்டம்.

சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டார் அவர்களால் அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பின் விளைவாக இந்திய ஜனாதிபதி அவர்கள் 1954-ம் வருடத்திய 8-வது 'ஆர்டினன்ஸ்' என்ற ஒரு அவசரச்சட்டத்தைப் பிறப்பித்திருக்கின்றனர். இந்த அவசரச் சட்டத்தால் இந்திய வருமானவரிச் சட்டத்தின் 34-வது செக்ஷனில் 34 (IA) என்ற ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

வருமானவரிச் சட்டத்தின் செக்ஷன் 34 (1)ல் ஏற்கனவே இருப்பது என்னவென்றால், ஒருவருக்கு குறிப்பிட்ட வருடத்திற்கு வருமான வரி விதிக்கப்பட்டு விட்டாலும், பிறகு இன்கம் டாக்ஸ் ஆபீசருக்குக் கிடைக்கும் தகவலின் பேரில் அவருடைய வருமானம் ஜாடாவுக்கும் வரி விதிக்கப்படவில்லை என்றோ, வரி விதிக்கப்பட்டது குறைவு என்றோ, அல்லது வரிச்சலுகை காண்பிக்கப்பட்டிருப்பது அதிக மென்றோ அவருக்குத் தோன்றினால், மறுபடியும் அவருக்கு நோட்டீசு அனுப்பி மறுபடியும் அது விஷயமாய் விசாரணை செய்து புதிதாக அதேவருட வருமானத்திற்குச் சட்டப்படிக்கான வரியை விதிக்கலாமென்றும்; ஆனால் வருமானம் ஏற்பட்ட வருடத்திலிருந்து 4 வருடங்களுள் தான் இவ்விதம் செய்ய இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு அதிகாரமுண்டென்றும்; வேண்டுமென்று வருமானம் மறைக்கப்பட்டிருப்பதாகவோ, வருமானம் அடைந்தவர் பொய்த் தகவல்களைக் கொடுத்திருப்பதாகவோ இன்கம்டாக்ஸ் ஆபீசருக்குத் தோன்றினால் மட்டில் வருமானம் ஏற்பட்ட வருடத்திலிர்து 8 வருடங்களுக்குள்ளும் இந்த அதிகாரத்தை இன்கம்டாக்ஸ் ஆபீசர் செலுத்தலாமென்றும் செக்ஷன் 34 (1)ல் இருக்கிறது.

இப்பொழுது மேற்கண்ட ஷரத்துக்கு அடுத்தபடியாக செக்ஷன் 34 (IA) என்று புதிய ஷரத்து ஒன்று இந்த அவசரச் சட்டத்தால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது (யுத்தகாலமாகிய) 1—9—1939க்குப் பின் 31—3—1946 வரை உள்ள காலத்தில் ஒருவர் அடைந்த வருமானத்தைப் பொறுத்து எந்த வருடத்திலாவது அவருக்கு விதிக்கப்படவேண்டிய வருமான வரியானது விதிக்கப்படாமல் போய்விட்டதென்றும் அவ்விதம் விட்டுப்போன வருமானமானது ஒரு லக்ஷ ரூபாய்க்கோ அதற்குமேலோ இருக்கக் கூடுமென்றும் இன்கம் டாக்ஸ் ஆபீசருக்குத தோன்றினால், வருமானம் ஏற்பட்டு நாலு அல்லது எட்டு வருடங்கள் சென்று விட்டாலும்கூட மறுபடியும் அவ்வருமானம் அடைந்த நபருக்கு நோட்டீசு அனுப்பி விசாரணை செய்து அவருக்கு அவ் வருடத்திற்கு வருமானவரி விதிக்கலா மென்றும் ஆனால் இவ்விதம் நோட்டீசு அனுப்புவதற்கு முன்பு மத்திய ரிவின்யு போர்டாருடைய அனுமதியின் பேரில் நோட்டீசு அனுப்ப வேண்டுமென்றும் இப்போது ஒரு புதியஷரத்து சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய அதிகாரத்தை 31-3-1956 வரையில் தான் இன்கம்டாக்ஸ் ஆபீசர்கள் செலுத்தலாம். இவ்வித நோட்டீசு விடப்பட்டவர் மத்திய ரிவின்யூ போர்டுக்கு மனுப்போட்டு ராஜியும் செய்து கொள்ளலாம். ராஜியானது மத்திய சர்க்காரின் அங்கீகாரத்தின் பேரில் தான் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதுதான் திருத்தச் சட்டம். யுத்த காலத்தில் ஏராள சம்பாத்தியம் செய்து அதை மறைத்துச் சர்க்காருக்கு வருமானவரி கொடுக்காமல் ஏமாற்றி வந்தவர்களுக்கு வரி விதிக்க ஒருதனிச் சட்டமும் அச்சட்டப்படி அமைக்கப்பட்ட விசேஷ அதிகாரங்களை உடைய ஒரு தனி டிரிபுனலும் இருக்கின்றன. ஆனால் இத்தனிச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் அரசியல் அமைப்புச்சட்டப்படி செல்லாதென சமீபத்தில் ஒரு வழக்கில் சுப்ரீம் கோர்ட்டார் ஒரு தீர்ப்பளித்திருந்தனர். ஏனென்றால் ஒரே வித நடத்தையுள்ள சிலருக்கு ஒரு சட்டமும் அதே விதம் நடந்த வேறு சிலருக்கு மட்டில் வேறுதனிச் சட்டமும் இருந்து அவர்கள் வெவ்வேறு முறைகளில் வரிவிதிக்கப்படுவது 'சட்டமானது ஒருவருக்கும் பாரபட்சம் காண்பிக்கக்கூடாது' என்ற அரசியல் ஜீவாதார உரிமைக்கு முரணாக இருப்பதாக சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு அவை செல்லாதென தீர்ப்பளித்தனர். ஆகையால் யாவருக்கும் பொதுவாகப் பொருந்தும் வருமான வரிச்சட்டத்திலேயே இவர்களைப் பற்றிய வரி விதிப்பு சம்பந்தமான இப்புதிய ஷரத்து இத்திருத்தச் சட்டத்தால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.



வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

இந்துப் பொதுக் குடும்பமும் மகனின் மகளுடைய திருமணச் செலவுகளும்

[ஆதாரம்:—67 லா வீக்லி 593—சென்னை ஹைகோர்ட் — உயர்நீதிபதிகள் கோவிந்த மேனன் அவர்களும் சந்திராரெட்டி அவர்களும்.]

இவ்வழக்கில் இந்துச் சட்ட சம்பந்தமாக அடிக்கடி எழும் இரண்டு பிரச்னைகளைப்பற்றி உயர்நீதிபதிகள் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

வேலாயுதம் என்பவர் 24-5-1946ல் இறந்தார். அவருக்கு முன்பே அவருடைய மகன் இறந்துவிட்டார். இறந்துபோன அம்மகனுக்கு ஒரு ஆண் மகனும், இரண்டு பெண்மக்களும், மனைவியும் இருந்தனர். வேலாயுதத்தின் இரண்டாவது மனைவியும் இருந்தாள். இவள் 1947ல் தன்னுடைய கணவருடைய சொத்துக்களில் தனக்குச் சரிபாதி பாகம் பிரிவினைசெய்து கொடுக்கவேண்டுமென்று பாக வியாஜ்யம் செய்தாள். இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டப்படி (Hindu Womens' Right to Property Act) இறந்த இந்துவின் விதவைக்கு மகனைப் போலவே ஒரு பாகம் உண்டு. ஆனால் அவள் அப்பாகத்வைத் தன்னுடைய ஆயுள்வரை அனுபவிக்கலாமே ஒழிய வேறு பாத்தியமில்லை. இப்பாக வியாஜ்யமானது அவளுடைய கணவனின் மைனர் பேரன், திருமணமாகாத பேத்திகள் இருவர், அவர்களுடைய தாயார் இந்நால்வர்மீதும் தொடரப்பட்டது. பிரதிவாதிகள் கட்சியாடியதன் பேரிம் இவ்வழக்கில் இரண்டு முக்கிய பிரச்னைகள் எழுந்தன. அவையாவன:—(1) இறந்த வேலாயுதத்தின் மகன் வயிற்றுப் பேத்திகள் இருவருடைய திருமணச் செலவுகளுக்காகப் பொதுக் குடும்ப ஐவேஜியிலிருந்து தொகைகள் ஒதுக்கிவிட்டுப் பாக்கியைத்தான் பாகம் செய்துகொள்ளவேண்டுமா என்ற பிரச்னை ஒன்று. (2) இரண்டாவதாக இறந்த வேலாயுதத்திற்கு ரொக்க ஐவேஜுகள் இருந்தன. இதைப் பாகம் செய்து வாதியிடம், அதாவது வேலாயுதத்தின் விதவையிடம், சரிபாதித் தொகைகளை ரொக்கமாகக் கொடுத்து விடுவதா, அல்லது அதன் வட்டியை மட்டில் அவள் ஆயுள்வரை அடைந்து வரும் விதம் எங்கேயாவது பந்தோபஸ்தாக வட்டிக்குப் போட்டு வைப்பதா என்பது இரண்டாவது பிரச்னை.

முதல் பிரச்னை சம்பந்தப்பட்ட வரையில் இவ்வழக்கில், ஹைகோர்ட் உயர்நீதிபதிகள் இருவரும் அளித்த அபிப்பிராயம் இதுதான். இந்துக் குடும்பமானது பிரிபடாமலிருக்கும்போது, அப்பொதுக் குடும்பத்தில் பிறந்த எல்லாப் பெண்மக்கள்களுடைய திருமணச் செலவுகளையும் பொது ஐவேஜியிலிருந்து செய்யவேண்டியதாக இருந்தாலும், பாகம் பிரித்துக் கொள்ளும்போது அப்படியல்ல.

அதாவது தகப்பனுக்கும் மகன்களுக்கும் பாகம் ஏற்படும்போது, தகப்பனுடைய திருமணமாகாத பெண்மக்களுடைய திருமணச் செலவுகளுக்காகப் பொதுக் குடும்ப ஐவேஜியிலிருந்து தொகைகளை ஒதுக்கி விட்டுப் பாக்கிச் சொத்தைத்தான் தகப்பனும் மகன்களும் பாகம் செய்துகொள்ளவேண்டும். ஆனால் மகனுடைய பெண் மக்களின் திருமணத்திற்காகப் பொதுக் குடும்ப ஐவேஜியிலிருந்து பணம் ஒதுக்கவேண்டியதில்லை. அந்தந்த மகனுக்குக் கிடைக்கும் பாகத்திலிருந்து அவரவருடைய பெண்மக்களின் கலியாணங்களைச் செய்து கொள்ளவேண்டுமே ஒழிய அச் செலவுகளுக்காகப் பொதுக் குடும்பத்திலிருந்து பணம் ஒதுக்கும்படி கேட்க மகனுக்கு உரிமை இல்லை என்பதுதான் சட்டம்.

வறு தினுசாகவும் இதை விளக்கலாம். அதாவது சகோதரர்கள் பாகம் செய்துகொள்ளும்போது அவர்களுடைய சகோதரிகளுடைய கலியாணச் செலவுக்காகப் பொதுக் குடும்பத்திலிருந்துத் தொகைகள் ஒதுக்கியோ வேறு விதமாகவோ ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டுமே ஒழிய, அவரவருடைய பெண்மக்களின் திருமணச் செலவுகளை அந்தந்தச் சகோதரர்தான் தம் தம் பாகத்திலிருந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். பிரஸ்தாப வழக்கில் வேலாயுதத்தின் மகன் வயிற்றுப் பேத்திகளுடைய கலியாணச் செலவுகளுக்காகப் பொது ஐவேஜியிலிருந்து யாதொரு தொகைகளும் ஒதுக்கப்படவேண்டியதில்லை என்றும், வேலாயுதத்தின் மனைவி விதவை - வாதிக்கு மொத்தச் சொத்தில் சரிபாதி பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். வேலாயுதத்தின் இறந்த மகனுடைய பாகம்தான் அம்மகனின் மகனுக்குக் கிடைக்கும். அப்பாதி பாகத்திலிருந்துதான் மகனுடைய மகளின் கலியாணங்களை நடத்திக் கொள்ளவேண்டுமென உயர்நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

இரண்டாவது பிரச்னை. வேலாயுதத்தின் விதவை வாதியின் பாகத்திற்காகக் கொடுக்கப்படும் சொத்தில் ரொக்கப் பணமும் இருந்தது. இந்த ரொக்கப் பணத்தின் வருமானத்தைத் தானே இர்தச் சட்டப்படி, விதவை அனுபவித்து வரலாம்; ஆகையால் பணத்தை அவளிடம் கொடுக்கக் கூடாதென்றும், எங்கேயாவது வட்டிக்குப் போட்டு, வட்டியை மட்டில் வாதி விதவை உயிர் உள்ள வரையில் அடைந்து வரும் விதம் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பிரதிவாதியின் கட்சி. அப்படிச் செய்ய அவசியமில்லை என உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். விதவையானவள் தனக்குக் கொடுக்கப்படும் ரொக்கத் தொகைகளின் அசலையே விரயமாக்கிவிடுவாள், அல்லது தொலைத்து விடுவாள், என்பதற்கு ஆதாரங்களுடன் பயமிருந்தால், அவள் அப்படிச் செய்யாமம் தடுக்கச் சட்டத்தில் வழிகள் இருக்கின்றன என்றும; அவ்விதம் யாதொரு பயமும் இல்லாமலிருக்கும்போதே, விதவையிடம் இருக்கும் ரொக்கத் தொகைகளை அவள் எப்படி அனுபவிக்கவேண்டுமென்ற நிபந்தனைகள் ஏற்படுத்த முடியாதெனவும் உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு இவ்வழக்கில் தீர்ப்பளித்தனர். பிறகு, விதவை அத்தொகைகளைத் தொலைத்துவிடுவாள் என்று எப்போதாவது பயம் ஏற்படும்போது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் சட்டத்தில் இடமிருப்பதையும் உயர்நீதிபதிகள் சுட்டிக் காண்பித்திருக்கின்றனர்.

ஜாகை - வாடகைக் கட்டுப்பாடுச் சட்ட வழக்கு. வேண்டுமென்று வாடகை கொடுக்காமலிருக்கும் குடிக்கூலிக்காரர்களைத்தான் அப்புறப்படுத்த முடியும்.

[ஆதாரம்:—67 லா வீக்லி - 373.]

சென்னைக் கட்டட ஜாகை - வாடகைக் கட்டுப்பாடுச் சட்டம் (Madras Buildings-Lease and Reant Control Act) என்பது 1949ம் வருடத்திய சென்னைச் சட்டம். இச்சட்டத்தில் பல ஷரத்துக்கள் 1951ல் மாற்றி அமைக்கப்பட்டன.

இச்சட்டத்தின் செக்ஷன் 7-ன்படி, ஒரு குடிக்கூலிக்காரர் கொடுக்க வேண்டிய வாடகைத் தொகையை, தாம் கொடுக்கவேண்டியதாக ஒப்புக்கொண்ட கெடுத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள்ளோ; அல்லது அது சம்பந்தமாக ஒப்பந்தம் ஒன்றுமில்லாவிட்டால். ஒவ்வொரு மாத வாடகைத் தொகையையும் அதற்கடுத்த மாத முடிவுக்குள்ளோ கொடுக்கத் தவறிவிட்டால் அவரைக் கட்டடத்தை விட்டு அகற்ற, கட்டடத்தின் சொந்தக்காரர் 'ரெண்டு கண்ட்ரோல'ருக்கு மனுப் போடலாமென்று இருந்தது. 1951ஆம் வருடத்தில் ஏற்பட்ட திருத்தப்படி, குடிக்கூலிக்காரர் மேற்கண்ட கெடுத் தேதிக்குள் வாடகை கொடுக்காமல் இருப்பது மட்டில் போதாது - அவர் வேண்டுமென்று வாடகை கொடுக்கத் தவறிவிட்டார்* என்று 'ரெண்டு கண்ட்ரோலர்' அபிப்பிராயப்பட்டால்தான் குடிக்கூலிக்காரரை வீட்டைக் காலி செய்யும்படி உத்தரவிடலாமென்று இச்சட்ட ஷரத்து மாற்றி அமைக்கப்பட்டிருப்பதை இவ்வழக்கில் உயர்நீதிபதி அவர்கள் எடுத்துக் காட்டி இருக்கின்றனர்.

* "Under the Amended Section there must be a finding not merely of default but of wilful default before a tenant can be evicted under S. 7 (2) of the Act for non-payment of rent."

பிரஸ்தாப வழக்கில் கட்டடக்காரருக்குச் சொந்தமான ஒரு கட்டடத்தை ஒருவர் சென்ற 30 வருடங்களாக வாடகைக்கு வைத்துக்கொண்டிருந்தார். மாத வாடகை ரூ. 7. கட்டடக்காரர், 1949 ஜூன் மாதத்தில் இக்குடிக்கூலிக்காரர் 4 மாதங்களாக வாடகை கொடுக்கவில்லை என்றும் அவரைக் கட்டடத்தை விட்டு அகற்ற வேண்டுமென்றும் 'ரெண்டுகண்ட்ரோல'ரிடம் மனுக் கொடுத்தார். குடியிருப்பவருடைய கட்சி என்னவென்றால், கட்டடத்தின் சொந்தக்காரர் அடிக்கடி வெளியூர்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு ஊருக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு தடவைதான் திரும்பி வருவது வழக்கமென்றும், அக்காரணத்தினால் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவையாக வாடகைத் தொகைகளைச் சேர்த்து வாங்கிக்கொள்ளுவதாக அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றும், வேறு சில கட்சிகளும் சொன்னார். இதற்கு ஆதாரமாக வாடகைக்கு இருப்பவர் பல ரசீதுகளைத் தாகல் செய்தார். இவைகளில் சில மூன்று மாத வாடகைக்கும்; சில நான்கு மாத வாடகைக்கும், சில அதிக மாதங்களுக்குமாக ஒரே தடவையில் கொடுக்கப்பட்ட ரசீதுகள். இக்கட்சியை 'ரெண்டுகண்ட்ரோலர்' ஏற்றுக்கொண்டு கட்டடக்காரரின் மனுவைத் தள்ளிவிட்டார். இதன் பேரில் கட்டடக்காரர் சப்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். சப்ஜட்ஜ் அப்பீலைத் தள்ளிவிட்டார். அப்பீல் தீர்ப்பின் பேரில் கட்டடக்காரர் திருத்தச் சட்டத்தின் செக்ஷன் 12B-ன்படி ஜில்லா கோர்ட்டுக்குப் பரிசீலனை (ரிவிஷன்) மனுக் கொடுத்தார். ஜில்லா ஜட்ஜ் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்புகளை மாற்றினார். அதாவது நான்கு மாதங்களுக்கொருமுறை வாடகை கொடுத்து வரவேண்டுமென்பதாக யாதொரு ஒப்பந்தமும் ருசுவாகவில்லை என்றும், அப்படி ஒரு ஒப்பந்தமிருந்தாலும் அது சட்டப்படி செல்லாதென்றும் அபிப்பிராயப்பட்டு, வாடகைக்காரர் அக்கட்டடத்தைக் காலிசெய்து விடவேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

அத்தீர்ப்பு, சரி அல்ல என்று வாடகைக்காரர் சென்னை ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுச் செய்து கொண்டதின் பேரில் உயர்நீதிபதி அவர்கள் ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பை ரத்துச் செய்து, கீழ்க் கோர்ட்டுகளின் தீர்ப்பை உறுதி செய்தனர். 1951ல் சட்டம் மாறி இருப்பதை உயர் நீதிபதி அவர்கள் எடுத்துக் காண்பித்திருக்கின்றனர். அதாவது, வேண்டுமென்று குடியிருப்பவர் வாடகை கொடுக்கத் தவறிவிட்டார் என்று இருந்தாலொழிய, அவரைக் காலி செய்யும்படி உத்தரவிட முடியாதென்றும்; நான்கு மாதத்திற்கு ஒரு முறை வாடகை கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், வாடகை பாக்கியைக் கொடுக்கவேண்டுமென்று கட்டடத்தின் சொந்தக்காரர் ஒரு தடவையாவது எழுத்து மூலம் கேட்கவில்லை என்றும்; அவர் அப்படி இருக்கும்போது வாடகைக்கு இருப்பவர்வேண்டுமென்று வாடகை கொடுக்கத் தவறியதாக ஏற்படாதென்றும்; மேலும் 1949 ஜூன் மாதத்தில் வாடகைக்காரர் செய்த மணியார்டர் தொகையைக் கட்டடக்காரர் வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டாரென்றும்; ஆகையால் குடியிருப்பவர் வேண்டுமென்று வாடகை கொடுக்கத் தவறியதாக இவ்வழக்கில் ஏற்படவில்லை என்றும் உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு-கட்டடக்காரரின் மனு செலவு தொகையுடன் தள்ளப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187733
600 003

சென்னைக்குப் பன்னிரெண்டு உயர் நீதிபதிகள்

ஆந்திர ராஜ்யம் பிரிந்து போவதற்கு முன்பு சென்னை ஹைகோர்ட்டுக்கு மொத்தம் 16 உயர் நீதிபதிகள் இருக்கலாமென்று இருந்தது. ஆந்திர ராஜ்யப் பிரிவினையின் விளைவாக இது சம்பந்தமாக ஜனாதிபதி அவர்களால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுத்தரவின்படி ஆந்திர ஹைகோர்ட்டுக்கு மொத்தம் 10 உயர் நீதிபதிகளும், சென்னை ஹைகோர்ட்டுக்கு மொத்தம் 12 உயர் நீதிபதிகளும் இருப்பார்கள்.

சென்னை விவசாய வருமான வரிச் சட்ட மசோதா. இப்போது காபி, தேயிலை, ரப்பர், கொய்னா, ஏலக்காய்த் தோட்டங்களுக்கு மட்டில்தான்.

விவசாயத்திலிருந்து ஒருவர் அடையும் வருமானத்திற்குத் தனியாக ஒரு 'வருமான வரி' (இன்கம்டாக்ஸ்) விதிப்பதைச் சென்னை சர்க்கார் சில காலமாக ஆலோசித்து வந்திருக்கின்றனர். நிலச் சீர்திருத்தங்களைப்பற்றி ஆலோசனை சொல்லுவதற்காகச் சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்ட 'சுப்ரமணியம் கமிட்டி' யாரும் நில வருமானத்திற்கு இப்போதிருக்கும் நில கிஸ்தியைத் தவிர, தனியாக ஒரு வருமான வரி போடுவதைச் சிபார்சு செய்தனர். ஆனால் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே எல்லாவித நில வருமானங்களுக்கும் வருமான வரி விதிப்பதைவிட முதலில் காப்பி, தேயிலை முதலிய தோட்டங்களுக்கு இவ்வரியை விதித்துப் பிறகு காலடைவில் இவ்வரியை மற்ற வகை விவசாய வருமானங்களுக்கும் விஸ்தரிக்கலாமென ஆலோசனைக் கூறினர். அந்த ஆலோசனையைச் சென்னை சர்க்கார் ஏற்றுக் கொண்டு இப்போது அத் தோட்ட வருமானங்களுக்கு மட்டில் வருமானவரி விதிக்கும் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கின்றனர். இம்மசோதாவானது சட்டசபைகளின் பொருக்குக் கமிட்டியால் பரிசீலனை செய்யப்பட்டு பிறகு தான் சட்டசபைகளின் அங்கீகாரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இம்மசோதா கடைசியில் எப்படி உருவாகின்றதோ அதேதான் காலடைவில் சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா நிலங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய விவசாய வருமானத்திற்குப் பொருந்தும் என்று எதிர்பார்க்கலாம்.

இம்மசோதாவின் முக்கிய அம்சங்களாவன:- சென்னை ராஜ்யத்திலுள்ள தேயிலை, காபி, ரப்பர், கொய்னா, எலக்காய் இவற்றைப் பயிர் செய்யும் நிலங்களிலிருந்து ஒருவர் ஒரு வருடத்தில் அடையும் நிகர வருமானத்தின் மீது அவருக்கு அடுத்த வருடத்தில் விவசாய வருமானவரி விதிக்கப்படும், வருட வருமானம் ரூ. 3000 க்குட்பட்டிருப்பவர்களுக்கு இவ்வரி கிடையாது. ரூ. 3000 அல்லது அதற்குமேல் வருமானம் உள்ளவர் கொடுக்கவேண்டிய விவசாய வரி விகிதம் பின் வருமாறு:—

	வரி
(1) முதல் 1500 ரூபாய்க்கு —	இல்லை
(2) அடுத்த ரூ 3500 க்கு —ரூ1க்கு வரி	0-0-9
(3) அடுத்த ரூ 5000 க்கு —ரூ1க்கு வரி	0-1-6
(4) அடுத்த ரூ 5000 க்கு —ரூ1க்கு வரி	0-2-6
(5) அடுத்த ரூ 5000 க்கு —ரூ1க்கு வரி	0-3-6
அதற்குமேல்உள்ள ஜாடா வருமானத்திற்கும் ரூ 1 க்கு வரி	0-4-0

பிரிபடாத இந்து குடும்பங்களும், அலிய சந்தான, மருமக்கள் தாயக்குடும்பம், குறைந்தது 5 நபர்களாவது அடங்கியவையாக இருந்தால் முதல் ரூ. 6000 வரை விவசாய வருமான வரி கிடையாது.

சூபர்டாக்ஸ்

ஒருவருக்கு வருட வருமானம் ரூ 25,000க்கும் மேலே இருந்தால் அவர் மேற்கண்ட வருமான வரியைத் தவிர 'சூபர்டாக்ஸ்' என்ற அமித வருமானவரி ஒன்றையும் கொடுக்க வேண்டும்.

சூபர்டாக்ஸ் விகிதங்கள்

1. முதல் 25,000 க்கு வரி.........இல்லை
2. அடுத்த ரூ 15,000க்கு ரூ 1க்கு வரி ரூ0-1-6
3. அடுத்த ரூ 15,000க்கு ரூ 1க்கு வரி ரூ0-2-6
4. அடுத்த ரூ 15,000க்கு ரூ 1க்கு வரி ரூ0-3-0
5. அடுத்த ரூ 15,000க்கு ரூ 1க்கு வரி ரூ0-4-0
6. அடுத்த ரூ 15,000க்கு ரூ 1க்கு வரி ரூ0-5-0
7. அதற்குமேல் உள்ள ஜாடா வருமானத்திற்கும்.........ரூ 1க்கு வரி ரூ0-6-0

கம்பெனிகளுக்கு மொத்த வருமானம் ஜாடாவுக்கும் ரூ 1க்கு 0-1-6 விதம் சூபர்டாக்ஸ் உண்டு. வருமானம் எவ்வளவு என்று கணக்குச் செய்வதில் விவசாயச் செலவுகள், லாண்டு ரிவின்யூ, நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டிய பகுதி அல்லது குத்தகைத் தொகை முதலியவற்றை நீக்கியே கணக்குச் செய்யப்படும்.

முதலில் விவசாய வருமான வரி விதிப்பவர் விவசாய இன்கம்டாக்ஸ் ஆபீசர். அவருடைய உத்தரவுக்குமேல் அசிஸ்டெண்டு கமிஷனருக்கு அப்பீல் உண்டு. அதற்குமேல் டிரிபுனலுக்கும் அப்பீல் உண்டு. சட்டப் பிரச்னைகள் ஏற்படும் வரி விதிப்புகள் ஹைகோர்ட்டால் முடிவு செய்யப்படுவதற்கும் இன்கம்டாக்ஸ் சட்டத்திலிருப்பது போல் இச்சட்டத்திலும் ஒரு ஷரத்து இருக்கின்றது. 1-4-1954 தேதி முதல் இவ்வரியை விதிக்க சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர்.

சென்ற இதழ் தொடர்ச்சி.

தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

[தொழிற்சாலைச் சட்டம் (The Factories Act—1948) என்பது 1948ஆம் வருடத்திய 63ஆவது மத்தியச் சட்டம். இச்சட்டம் 1—4—1949 முதல் அமுலுக்கு வந்தது. இச் சட்ட ஷரத்துக்களும், அதை அனுசரித்துச் சென்னைச் சர்க்காரால் இயற்றப்பட்டுள்ள விதிகளும் "வக்கீல்"—1954 ஜனவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருப்பது சட்ட விளக்கமே ஒழிய மொழிபெயர்ப்பு அல்ல.]

1954 ஆம் வருடத்திய தொழிற்சாலைத் திருத்தச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்கள்

லீவுச்சம்பளம் லீவு எடுக்கும்போதே கொடுக்கப்பட வேண்டும்

வயது வந்த தொழிலாளர்களுக்கு 4 நாட்களுக்குக் குறையாமலும், குழந்தைகளுக்கு 5 நாட்களுக்குக் குறையாமலும் லீவு கொடுக்கப்படும் போது, லீவு நாட்களுக்கான சம்பளத்தை லீவு ஆரம்பமாகும் முன்பே அத்தொழிலாளரிடம் கொடுத்து விடவேண்டும்.

லீவு நாட்களுக்கான சம்பளம் கொடுக்கப்படாவிட்டால், அதை 1936-ஆம் வருடத்தியச் சம்பளப் பட்டுவாடாச் சட்ட ஷரத்துக்களின்படி (Payment of Wages Act 1936) தொழிற்சாலைக்காரர்களிடமிருந்து வசூல் செய்யப்படலாம்.

லீவு சம்பந்தமாக எந்த எந்தக் கணக்குகள் வைத்துக் கொள்ளப்படவேண்டுமென்று விதிகள் செய்ய ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. மேலும் எந்தத் தொழிற்சாலையிலாவது அனுஷ்டானத்திலிருக்கும் லீவு சம்பந்தமான விதிகள் தொழிலாளர்களுக்கு இச் சட்ட ஷரத்துக்களை விட அதிக அனுகூலமாக இருந்தால், அவ்விதத் தொற்சாலைகளுக்கு இச்சட்ட ஷரத்துக்களிலிருந்து விதி விலக்கு அளிக்கவும் ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. இவைதான் 1954ம் வருடத்திய தொழிற்சாலைத் திருத்தச் சட்டத்தில் 'லீவு' சம்பந்தமான முக்கிய ஷரத்துக்கள் இனி லீவு சம்பந்தமான விதிகளைக் கவனிப்போம்.

லீவு ரிஜிஸ்டர்கள்

விதி 87

ஒவ்வொரு தொழிற்சாலை மானேஜரும் நமூனா 15 ல் கண்டபடி ஒரு சம்பளத்துடன் லீவு ரிஜிஸ்டர் (Leave with wages Register) வைத்துக்கொள்ள வேண்டும், எந்தத் தொழிற்சாலையிலாவது வைத்துக்கொள்ளப்படும் 'மஸ்டர் ரோல்' என்ற தினசரி ரிஜிஸ்டர்களிலேயே இந்த லீவு விவரங்களும் இவ் விதிகளின்படி காணப்பட்டிருந்தால், அந்த மஸ்டர் ரோலே போதுமென்று சீப் இன்ஸ்பெக்டர் எழுத்துமூலம் அனுமதிக்கலாம். இந்த ரிஜிஸ்டர்களில் கடைசி பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருடங்கள் வரை அவைகளை வைத்துக்கொள்ளவேண்டும். இன்ஸ்பெக்டர் கேட்கும்போது தாகல் செய்யவேண்டும்.

'லீவுபுக்':— ஒவ்வொரு தொழிலாளருக்கும் நமூனா 16ன்படி ஒரு 'லீவுபுக்' கொடுக்கப்பட்டு அதை தொழிலாளரே வைத்துக்கொள்ளவேண்டும். இதில் விடுமுறை நாட்களையும் லீவு நாட்களையும் தொழிற்சாலை மானேஜரோ அவர் ஏஜண்டோ பதிவுசெய்து மறுபடி அதை தொழிலாளரிடமே கொடுத்துவிடவேண்டும். இந்த 'லீவுபுக்' என்பது தொழிலாளருடைய சொத்தாகும். தொழிலாளர் இந்தப் புத்தகத்தை காணாமலடித்துவிட்டால் அவரிடம் தொழிற்சாலை மானேஜர் ஒரு அணா வாங்கிக்கொண்டு வேறு நகல் எழுதி அவரிடம் கொடுக்கவேண்டும்.

மெடிகல் சர்ட்டிபிகேட்

விதி 89

ஒரு தொழிலாளர் வேலைக்கு வராமலிருந்து, தேக அசௌக்கியத்தினால் அவர் வேலைக்கு வரவில்லை என்று தோன்றினால், தொழிற்சாலை மானேஜர் அவரை ஒரு மெடிகல்

சர்டிபிகேட் தாகல் செய்யும்படி நோட்டீஸ் மூலம் கேட்கலாம். அத் தொழிலாளர் ஒரு ரிஜிஸ்டரான டாக்டரிடமோ, வைத்தியர் அல்லது ஹக்கீமிடமோ சர்டிபிகேட் வாங்கி தாகல் செய்யவேண்டும். அத் தொழிலாளர் எவ்வளவு நாட்கள் வேலைக்கு வரமுடியாதென்று மெடிகல் சர்டிபிகேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

வேலை செய்ய முடியாமலிருக்கும் நாட்கள்

விதி 90

எக்காரணத்தாலோ, தொழிலாளர் இஷ்டப்பட்டும் வேலை செய்ய முடியாமல் போன நாட்களைக் குறித்து தொழிற்சாலை மானேஜர் இன்ஸ்பெக்டருக்கு தெரிவிக்கவேண்டும். எவ்வளவு தொழிலாளர்கள் வேலைசெய்ய முடியவில்லை என்றும் அதன் காரணத்தையும் கண்டு தெரிவிக்கவேண்டும். லீவு ரிஜிஸ்டரிலும் லீவு புக்கினிலும் இவ் விஷயத்தை பதிவு செய்ய வேண்டும்.

விதி 91

தொடர்ந்த 12 மாத வேலைசெய்த முன்போ பின்போ, அதற்கடுத்த 12 மாதங்களில் தமக்கு லீவு வேண்டாமென்று எந்தத் தொழிலாளரும் தொழிற்சாலை மானேஜருக்கு நோட்டீஸ் மூலம் தெரிவிக்கலாம். இவ்விஷயத்தை மானேஜர் லீவு ரிஜிஸ்தரிலும் லீவு புக்கிலும் பதிவு செய்யவேண்டும்.

லீவு கொடுப்பதுபற்றி

விதி 92

சம்பளத்துடன் ஒரு தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் லீவு நாட்களை லீவு ரிஜிஸ்டரிலும் லீவு புக்கிலும் பதிவுசெய்ய வேண்டும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு கூடுமானவரை ஒரே சமயத்தில் லீவு கொடுக்கவேண்டும். தொழிற்சாலை மானேஜருடைய அங்கிகாரத்தின்பேரில் ஒரு தொழிலாளர் தமக்குக் கொடுக்கப்படவேண்டிய லீவு நாட்களை வேறு தொழிலாளர் எடுத்துக்கொள்ளும்படிக்கும், அத்தொழிலாளருடைய லீவு நாட்கள் தமக்குக் கிடைக்கும்படிக்கும் ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

லீவு எடுக்காமல் தொழிலாளர் இறந்தால்

விதி 93

திரும்ப வேலைக்கு வருமுன் ஒரு தொழிலாளர் இறந்துபோய் விட்டால், இச் சமாசாரம் தெரிந்த ஒரு வாரத்திற்குள் அவருடைய லீவு நாட் சம்பளத்தை அவருடைய நாமினிக்கு, அதாவது அவரால் குறிப்பிடப்பட்டிருக்கும் வாரசுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

விதி விலக்குகள்

செக்ஷன் 84
விதி 94

எந்தத் தொழிற்சாலையிலாவது அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய லீவு வசதிகள் இச்சட்டத்தால் அளிக்கப்பட்டிருப்பதைவிட தொழிலாளருக்கு அதிக அனுகூலமாக இருந்தால், அவ்விதத் தொழிற்சாலைகளுக்கு இச்சட்டத்தில் இது சம்பந்தமாகக் கண்டிருக்கும் விதிகளிலிருந்து விதி விலக்கு அளிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. இவ்வித விதி விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் அனுஷ்டிக்கப்படும் லீவு விதிகளைப்பற்றிய திட்டங்கள் எவை என்று அந்த தொழிற்சாலையில் பிரசாரம் செய்வதுடன் இதற்காக ஒரு ரிஜிஸ்டரும் வைத்துக்கொண்டு அதிலும் அவ் விஷயங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். ராஜ்ய சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட இந்த திட்டத்தை, சர்க்கார் அனுமதியின்றி, தொழிற்சாலை நிர்வாகத்தால் மாற்றமுடியாது.

சர்க்காரின் அதிகாரங்கள் வேறு இடங்களையும் இச்சட்டத்திற்குள் கொண்டுவரலாம்.

செக்ஷன் 85

'தொழிற்சாலை' என்றால் என்ன என்பதை முதலிலேயே கவனித்தோம். விசையின் உதவியால் 'உற்பத்தி வேலை'கள் செய்யப்பட்டால், அங்கே குறைந்தது 10 தொழிலாளர்களாவது வேலை செய்தால்தான் அது தொழிற்சாலையாகும். ஆனால் 10 தொழிலாளர்களுக்கும் குறைவாக வேலை செய்யும் அவ்வித இடங்களுக்கும் தொழிற்சாலைச் சட்டத்தின் எல்லா விதிகளையுமோ சில விதிகளை மட்டுமோ அமுலுக்குக் கொண்டுவர ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அதே போல் விசையின் உதவியில்லாமல் உற்பத்தி வேலைகள் நடத்தப்படும் இடங்களில் 20 தொழிலாளர்களுக்குக் குறைவாக வேலை செய்தாலும் அவைகளையும் தொழிற்சாலை சட்டத்திற்குள் கொண்டுவர ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரத்தை உபயோகித்துத்தான் இப்பொழுது விசையின் உதவியில்லாமல் உற்பத்தி வேலைகள் நடக்குமிடங்களில் குறைந்தது 10 தொழிலாளர்கள் வேலை செய்தாலும் அவைகள் 'தொழிற்சாலை'கள் என்று சர்க்காரால் பல தொழிற்சாலைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மேலும் ஒரு இடத்திற்கு சொந்தக்காரரால் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படாவிட்டாலும்

அவருடைய அனுமதியின்பேரிலோ, அவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டோ தொழிலாளர்கள் உற்பத்திவேலை நடத்தும் இடங்களையும் தொழிற்சாலைச் சட்டத்திற்குள் கொண்டுவர சர்க்காருக்கு அதிகாரமுண்டு. ஒரு 'இடத்திற்கு சொந்தக்காரர்' என்பதில் அந்த இடத்தைக் குத்தகை அல்லது போக்கியத்திற்கு வைத்திருப்பவர்களும் சேர்ந்தவர்களே.

விதி விலக்குகள் அளிக்கலாம்

செக்ஷன் 85

கல்வி, பயிற்சி, சீர்திருத்தம் சம்பந்தமான பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்த பட்டறைகளுக்கும், உற்பத்தி வேலைகள் நடக்குமிடங்களுக்கும் இச்சட்டத்தின் எந்த ஷரத்துக்களுமோ அல்லது சில ஷரத்துக்கள் மட்டுமோ அனுஷ்டிக்கப்படவேண்டியதில்லை என்று அவைகளுக்கு 'விதி விலக்கு' அளிக்க சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அங்கேயும் தினசரி வேலை நேரத்தைப் பற்றியும் விடுமுறை நாட்களைப் பற்றியும் ஒரு திட்டம் தயார்செய்து சர்க்காரின் அங்கீகாரம் வாங்கிக்கொள்ளவேண்டும். அப்படி வாங்கிக்கொள்ளாவிட்டால் இவ்விஷயங்கள் சம்பந்தமான தொழிற்சாலைச் சட்ட விதிகளிலிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட மாட்டாது.

அபாயகரமான வேலைகள்

செக்ஷன் 87 விதி 95

ஒரு தொழிற்சாலையில் நடக்கும் வேலைகள் தொழிலாளர்களுக்கு அபாயத்தையோ, விஷம் கலப்பதையோ வியாதியையோ விளைவிக்கக் கூடியதென்று ராஜ்ய சர்க்காருக்குத் தோன்றினால் அவ்வித அபாயமான தொழிற்சாலைகள் எவை என்று சர்க்காரால் பிரகடனம் செய்யப்படும். அத்தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட வேலைகளில் ஸ்திரீகளும், சிறுவர்களும் குழந்தைகளும் வேலை செய்யக்கூடாதென்று சர்க்கார் தடை செய்யலாம். அங்கே வேலை செய்யும் அல்லது வேலை செய்யவரும் தொழிலாளர்களை டாக்டர் அடிக்கடி பரிசோதனை செய்யவேண்டுமென்றும், தகுதியில்லாதவர்களை அவ்விடங்களில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளக் கூடாதென்றும் தடை செய்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. மேலும் அவ்வித இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் பக்கத்தில் வேலை செய்பவர்களுக்கும் தகுந்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்றும்; சிற்சில சரக்குகளை அங்கே உபயோகிப்பது பற்றி தடை விதித்தோ நிபந்தனைகள் ஏற்படுத்தியோ கட்டுப்பாடுகள் ஏற்படுத்துவது பற்றியும் விதிகள் ஏற்படுத்த சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

இந்த அதிகாரத்தை அனுசரித்து, எந்த எந்த தொழிற்சாலைகள் அல்லது வேலைகள் அபாயகரமானவை என்று விதி 95ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வகை தொழிற்சாலையிலும் எவ்வித பந்தோபஸ்துகளும் ஏற்பாடுகளும் கையாளப்படவேண்டுமென்றும் அவ்விதியில் விளக்கப்பட்டிருக்கின்றன.

விபத்துக்கள் ஏற்பட்டால்

செக்ஷன் 88 விதி 96

எந்த தொழிற்சாலையிலும், கீழே விவரிக்கப்பட்டிருக்கும் விபத்துக்களில் எது ஏற்பட்டாலும் அத் தொழிற்சாலையின் மானேஜர் அதை தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்கு, டெலிபோன் மூலமோ, தந்தி மூலமோ, அல்லது பிரத்தியேக ஆள் மூலமோ உடனே தெரிவிக்கவேண்டும். உயிர்ச்சேதம் விளைவித்த விபத்துக்களைப் பற்றியும், உயிர்ச்சேதம் விளைவிக்கக்கூடிய விபத்துக்களைப் பற்றியும் மேற்கண்டபடி தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிப்பதுடன், அது விஷயத்தை தொழிற்சாலை மானேஜர் உடனே மேற்கண்டவிதம் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அல்லது சப் டிவிஷனல் ஆபீசருக்கும், சமீபத்திலிருக்கும் போலீஸ் ஸ்டேஷன் ஆபீசருக்கும் தெரிவிக்க வேண்டும். இவ்விதம் தெரிவித்துவிட்டு, விபத்து ஏற்பட்ட 12 மணி நேரத்திற்குள் தொழிற்சாலை மானேஜர் நமூனா 18ன் படி ரிபோர்ட்கள் எழுதி மேற்கண்ட அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும்.

விபத்துக்களின் விபரம்:—

(1) உயிர்சேதம் (2) விபத்து ஏற்பட்ட 48 மணி நேரம் வரையில் அத்தொழிலாளர் வேலை செய்ய முடியாதபடி அவருடைய சரீரத்திற்கு ஏற்படும் கெடுதி, இவை தவிர தொழிலாளருக்கு விபத்து நேர்ந்தாலும் நேராவிட்டாலும் கீழே கண்டிருக்கும் சம்பவங்கள், அதாவது:—

(1) நீராவியை அமுக்கி வைத்திருக்கும் யந்திரம் பிளவுபடுவது (2)கிரேன், டெரிக், வென்சு, ஹாயிஸ்டு முதலிய சாதனங்கள் உடைவது (3) வெடிப்பு அல்லது நெருப்பு பிடித்தல் (4) காஸ் வைத்திருப்பது (5) கட்டடம், கூரை, பாலம், சுவர் முதலியவை இடிந்து விழுவது,

மேற்கண்ட விபத்துக்கள் அல்லது சம்பவங்கள் நேர்ந்தால் முன் விவரித்தபடி தகவல் அனுப்பவேண்டும்.

சில வியாதிகள் ஏற்பட்டால்

செக்ஷன் 89 விதி 97

தொழிற்சாலைச் சட்டத்தின் ஷெடியூலில் சில வியாதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் தொழிற்சாலைகளில் உற்பத்தி வேலைகளில் உபயோகிக்கப்படும் உபயோகங்கள் பாஷாணம் முதலியவற்றால் ஏற்படக்கூடிய 'லெட் பாயிஸனில்' முதலிய வியாதிகள். 17 வகை வியாதிகள் ஷெடியூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. *இவ் வியாதிகளில் எது ஏற்பட்டாலும் அது விஷயத்தை தொழிற்சாலை மானேஜர் உடனே ஃபாரம் 19 ன் படி ரிபோர்ட்கள் எழுதி சீப்இன்ஸ்பெக்டருக்கும், சர்டிபையிங் சர்ஜனுக்கும் தெரிவிக்கவேண்டும்.

மேற்கண்ட வியாதிகள் இருப்பதாக தொழிலாளரை பரிசோதனை செய்யும் டாக்டர்களுக்குத் தோன்றினாலும், அது விஷயத்தை சீப் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கவேண்டியது அந்த டாக்டருடைய கடமையாகும். டாக்டருடைய பீசை தொழிற்சாலையின் ஆட்சியாளர் கொடுக்கவேண்டும். இவ்வித வியாதிகளை டாக்டர் தெரிவிக்காமல் இருந்தால் அது குற்றமாகும். ரூபாய் 50 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

விபத்துக்களைப்பற்றி சர்க்கார் விசாரணை.

செக்ஷன் 90

எந்தத் தொழிற்சாலையிலும் ஏற்பட்ட விபத்துக்களைப்பற்றியோ, அல்லது இச்சட்டத்தின் ஷிடியூலில் குறிப்பிடப்படும்வியாதிகளைப்பற்றியோ அவைகளின் காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டியது. யுக்தமென்று சர்க்காருக்குத் தோன்றினால் இதற்குத் தகுதியுள்ள எவரையும் நியமிக்கலாம். அவருடன் சட்டப்படிப்புள்ள ஒருவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார். இவ்விசாரணை நடத்துபவருக்கு தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்குள்ள அதிகாரங்களும் சிவில் கோர்ட்டுகளைப் போன்ற அதிகாரங்களும் உண்டு. இவ்விசாரணையின் முடிவு சர்க்காருக்கு தெரிவிக்கப்பட்டவுடன், அதை பிரசுரம் செய்யவும் சர்க்காருக்கு உரிமை உண்டு.

* The Schedule:— List of Notifiable Diseases.

மாதிரி எடுத்துச் சோதனைக்கு அனுப்பலாம்.

செக்ஷன் 91

எந்தத் தொழிற்சாலையில் உபயோகிக்கப்படும் எந்த சரக்கும் இச்சட்ட ஷரத்துக்களுக்கோ விதிகளுக்கு மாறாகவோ இருப்பதாகவாவது, அல்லது அச்சரக்குகள் தொழிலாளர்களுடைய தேகத்திற்குக் கெடுதி விளைவிக்கக்கூடியவை என்றாவது தொழிற்சாலை இன்ஸ்பெக்டருக்குத் தோன்றினால் அவர் தொழிற்சாலையின் ஆட்சியாளர் அல்லது மானேஜர் இவர்களுக்குத் தெரிவித்து அவரையும் கூட வைத்துக் கொண்டு அச்சரக்கின் மாதிரி எடுத்துக்கொள்ள அதிகாரமுண்டு. இப்படி மாதிரிக்காக எடுக்கப்பட்ட சரக்கை 3 பங்காகச் செய்து ஒரு பாகத்தை தொழிற்சாலைக்காரர்களிடம் கொடுக்கவேண்டும். ஒரு பாகத்தை சர்க்கார் ரசாயனப் பரிட்சைக்காக அனுப்பவேண்டும். மூன்றாவது பாகத்தை இன்ஸ்பெக்டரே தம் வசம் வைத்துக்கொண்டு, தேவையானால் கோர்ட்டில் ஆஜர் செய்வார். ஒவ்வொரு பாகத்தையும் மாற்றுவதற்கு வழியில்லாமல் சீல் வைக்கப்படும். சர்க்கார் ரசாயன பரிசோதகர் சொல்லும் அபிப்பிராயம் சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படும்.

குற்றங்களும் தண்டனையும்

செக்ஷன் 92

இச்சட்டத்தின் ஷரத்துக்களோ, விதிகளோ, அல்லது இச்சட்டப்படி அதிகாரிகளால் எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட உத்தரவுகளோ மீறப்பட்டால், தொழிற்சாலையின் ஆட்சியாளர், மானேஜர் இருவரும் குற்றம் செய்பவர்களாவார்கள். மூன்று மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். ஒரு செய்கைக்காக தண்டிக்கப்பட்டவர் தண்டனை அடைந்த பிறகும் அச்செய்கையைச் செய்து கொண்டே இருந்தால், அச்செய்கை நடக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ. 75 வரை அதிக அபராதம் விதிக்கப்படலாம். இது பொதுவான விதி, வேறுவகையில் இச்சட்டத்தில் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் குற்றங்களுக்கு இப்பொழுது விதி கிடையாது. (தொடரும்)

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுதஇடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

பஞ்சாயத்து உபதலைவரை மெம்பர்களே நீக்கமுடியுமா ?

89. கேள்வி: (ராஜன்—வள்ளியூர்.) பஞ்சாயத்து போர்டு உபத்தலைவரை நீக்க வேண்டுமானுல் எந்த செக்ஷன்படி, எந்த காரணங்களால், எத்தனை மெம்பர்கள் எப்படி நீக்க வேண்டும் ? காரணங்கொண்டு உபத்தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றினுல் அதைத் தலைவர் நிராகரிக்க அதிகாரம் உண்டா ? நம்பிக்கையில்லாத்தீர்மானம் நிறை வேற்றினுல் அதை அமுல் நடத்துவது யார் ? எப்பொழுது ?

பதில்: பஞ்சாயத்தின் உபதலைவரை பஞ்சாயத்து மெம்பர்கள் தேர்ந்தெடுக்கலாமே ஒழிய, தேர்ந்தெடுத்த பிறகு பெரும்பான்மை அபிப்பிராயத்தால் உபத்தலைவரை நீக்கமுடியாது. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் செய்வதின் மூலம் உபதலைவரை நீக்கப் பஞ்சாயத்துச் சட்டத்தில் இடமில்லை. (பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 23.)

ஆண்மக்களில்லாத இந்து விடமிருக்கும் பூர்வீகச் சொத்து.

90. கேள்வி: (வெங்கடாசலம்-திருப்பத்தலை) "வக்கீல்" 1654 மே மாத வெளியீட்டில், தகப்பன் சுவீகாரம் செய்து கொள்ளுவது குறித்து பெண்ணுக்கு அதை ஆட்சேபிக்க உரிமை இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பெண் குழந்தையுடைய ஒருவர் அவர் இருக்கும் போதே, மனைவி இறந்து விட்டாள். தாம் எவரையும் சுவீகாரம் செய்து கொள்ளாமல், தம்முடைய மூதாதையாரால் சம்பாதிக்கப்பட்டச் சொத்துக்களில் ஒரு பகுதியைத்தன் தங்கை மகனுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு இனும் சாசனம் செய்து விட்டு மிகுதியுள்ளதைத்தன் மகளுக்குச் செட்டில்மெண்ட்டு எழுதியுள்ளார். அவருடைய தங்கை மகனுக்கு எழுதிவைத்துள்ள சொத்துக்கள் மீது, திருமணமாகி, மைனர் நீங்கியபின் அப்பெண் தாவா செய்ய சட்டமுண்டா ? தாவா செய்தால் இனும் சாசனம் செல்லத்தக்கதல்ல என்று பெண்ணுக்குச் சாதகமாக ஏற்படுமா ?

பதில்: சொத்தின் சொந்தக்காரர் தங்கை மகனுக்கு எழுதிவைத்த இனும் சாசனமும் சரி, மகளுக்குச் செய்து வைத்த செட்டில்மெண்ட்டும் சரி, இரண்டும் செல்லும். அதை ஆக்ஷேபிக்க பெண் மகளுக்கு உரிமை இல்லை. ஆண் மக்கள் இல்லாத இந்துவிடமிருக்கும் சொத்தானது, அவருடைய மூதாதையரால் சம்பாதிக்கப்பட்டப் பூர்வீகச் சொத்தாக இருந்தாலும், அல்லது அவருடைய சுயசம்பாத்தியச் சொத்தாக இருந்தாலும் இரண்டும் ஒன்றுதான். பூர்வீகச் சொத்தை உடைய ஒரு இந்துவானவர்

சுவீகாரம் செய்து கொண்டால், உடனே சுவீகாரமகனுக்கும் அச்சொத்தில் பாத்தியம் ஏற்பட்டுவிடும்.

ஜில்லா போர்டுத் தேர்தலில் அபேட்சகராக நிற்க யோக்கியதாம்சங்கள்.

91. **கேள்வி:** (P. 726. ராமசாமி—முருகெல்லிக்கோட்டை) ஜில்லா போர்டுத் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்பவர்களுக்குப் படிப்பு, வயது, யோக்கியதாம்சங்கள், அருகதை என்ன என்ன வேண்டும்?

பதில்: ஜில்லா போர்டுத் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்பவர்களுக்கு அடியில் கண்ட யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டும்:—

(1) ஜில்லா போர்டுத் தேர்தலுக்கு தயார் செய்யப்பட்டிருக்கும் வாக்காளர் ஜாப்தாவில் (Electoral Roll) பெயர் உள்ளவராக இருக்க வேண்டும். வாக்காளர் ஜாப்தாவில் யார் யாருடைய பெயரைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற விதிகள் இருக்கின்றன. சாதாரணமாக ஜில்லா போர்டு எல்லைக்குள் வசிக்கும் 21 வயது பூர்த்தியானவர்கள் எல்லோருடைய பெயரும் வாக்காளர் ஜாப்தாவில் இருக்கும். வயது, வாசம், இரண்டைத்தவிர படிப்பு அருகதை போன்ற வேறு எவ்வித யோக்கியதாம்சங்களும் வேண்டியதில்லை. ஆனால் ஒருவருடைய பெயர் "வாக்காளர் ஜாப்தா"வில் இல்லாவிட்டால் அவர் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்க முடியாது. வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருந்தாலும் சில யோக்கியதாம்சக் குறைவுகள் இருக்கக் கூடாது. அதாவது தேர்தல் நியமனச் சீட்டு தாகல் செய்யப்படும் போதோ தேர்தலின் போதோ ஒருவர். (1) புத்தி சுவாதீனமில்லாமலிருந்தாலும் செவிட்டு ஊமையாக இருந்தாலும், குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டவராக இருந்தாலும் (2) கடன் கொடுக்க சக்தியற்ற இன்சால்வெண்ட் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அல்லது அவரே இன்சால்வென்சி மனுக் கொடுத்திருந்தாலும், (3) அப்போது ஊர்ஜிதத்திலிருக்கும் ஜில்லா போர்டு காண்ட்ராக்ட் வேலைகளில் அக்கரை உள்ளவராக இருந்தாலும் (4) ஜில்லா போர்டுக்கு வக்கீலாக இருந்தாலும்; ஜில்லா போர்டுக்கு எதிராக வகாலத்து வாங்கி இருந்தாலும், (5) ஜில்லா போர்டுக்கு முந்திய வருடம் வரை கொடுக்க வேண்டிய எவ்வித தொகைகளையும் கட்டணங்களையும் கோட்டீசு கிடைத்தும் கட்டாமல் பாக்கி வைத்திருந்தாலும், ஒருவர் ஜில்லா போர்டுத் தேர்தலுக்கு நிற்க முடியாது. மேலும் கிருமினல் வழக்குகளில் ஆயுள் தண்டனையோ, ஆறு மாதத்திற்கு மேற்பட்ட சிறை தண்டனையோ அடைந்தவர்கள் தண்டனை காலத்திலும் அது முடிந்த 5 வருடம் வரையிலும் தேர்தலுக்கு நிற்கமுடியாது. தண்டனை அடைந்த கிருமினல் வழக்கானது ஒரு இழிவான மன நிலைமையைக் காட்டக்கூடிய குற்றத்திற்காக (Involving Moral delinquency) இருந்தால்தான் இத்தடை. அரசியல் சம்மந்தமான குற்றங்களுக்கும் இழிவான மனநிலைமையைக் காட்டாத குற்றங்களுக்கும் ஒருவர் தண்டனைப் பட்டிருந்தாலும் அவர் அபேட்சகராகநிற்கத் தடை இல்லை. தவிர சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் (கிராம பெரிய தனக்காரர் தவிர) தேர்தலில் அபேட்சகராக நிற்க முடியாது. தேர்தல் சம்பந்தமான குற்றங்களுக்காகத் தண்டனை அடைந்தவர்களும் தண்டனை முடிந்த 5 வருடம் வரையில் தேர்தலில் போட்டியிடமுடியாது. (ஜில்லா போர்டுச் சட்டம்—செக்ஷன் 54, 55, 59. ஜில்லா போர்டுத் தேர்தல் சம்பந்தமாக இருந்த 1932 ஆம் வருடத்திய விதிகள் ரத்து செய்யப்பட்டு 1954ல் புதிய விதிகள் இயற்றப்பட்டிருப்பதை கவனிக்கவும். ஜில்லா போர்டுத் தேர்தல் புதிய விதிகள் 19—5—1954 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I—A ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 68—85ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.)

ஆண் மகனில்லாத இந்துவின் உயில்—பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி

92. **கேள்வி:** (காதர் மீரு ராவுத்தர்—வயலோகம்) இந்து ஒருவரால் சொந்தமாகவும், பூர்வீகப் பாகப்பிரிவினையிலும் கிடைத்த சொத்துக்களை தன் சகோதரர்களில் ஒருவருக்கு "உயில்" எழுதி அதில் தன் மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுத்து ஆதரிக்கும்படியும் எழுதி வைத்து விட்டு இறந்து போனர். அவருக்கு மனைவியைத் தவிர வேறு பிள்ளைக் குட்டிகள் இல்லை. இந்து மதச் சட்டப்படி மேற்கண்ட சொத்துக்களை ஷை "உயில்" எழுதி வைத்தவருடைய மனைவி விற்கப் பாத்தியம் உண்டா? கிரையம் வாங்கினல் செல்லுமா?

பதில்: உயில் செல்லும். ஒரு இந்துவிடம் இருக்கும் சொத்துக்கள் அவருடைய சுய சம்பாத்தியத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்களாக இருந்தாலும் சரி, பூர்வீகச் சொத்துக்களாக இருந்தாலும் சரி, அவனுக்கு ஆண் மக்கள் இல்லாத வரையில், அச்சொத்துக்கள் யாவும் அவருக்குமட்டில் உரிமையுள்ள சொத்துக்களாகும். அச்சொத்துக்களை அவர் உயிருள்ள

போதே இஷ்டப்படி பராதீனங்கள் செய்யலாம்; அவற்றைப்பற்றி அவர் 'உயில்' எழுதியும் வைக்கலாம். அவர் இறந்த பிறகு மனைவிக்கு ஜீவனாம்சம் அடையும் பாத்தியததைத் தவிர சொத்தில் வேறு எவ்வித உரிமையும் இல்லை. அவள் அச்சொத்துக்களை விற்க முடியாது. அம் மனைவியிடம் கிரயம் வாங்கினால் செல்லாது.

இந்துச்சட்டம் தகப்பனும் அவருடைய சகோதரர்களும் பாகம் பிரியாமல் இருக்கும்போது மகன் தனக்குத் தனியாக பாகம் கேட்கலாமா?

93. கேள்வி: (இளமுருகன்—திருச்சி)

ஒரு ஹிந்து குடும்பத்தில் மூன்று சகோதரர்கள் தங்களது தகப்பனாரால் சம்பாதிக்கப்பட்ட சொத்தை சட்ட ரீதியாக, இன்னும் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு மேற்படி சொத்தை மூன்று பாகங்களாக பிரித்துக் கொண்டு அதனை அவர்களே அனுபவித்து கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு ஒரு விதவைத் தாயுண்டு. அச்சகோதரர்களுள் மூத்த சகோதரனின் முதல் மனைவிக்கு ஒரு ஆணும் இரண்டாம் மனைவிக்கு ஐந்து ஆண் குழந்தைகளும் விவாகமாகாத ஐந்து பெண் குழந்தைகளும் இருக்கின்றனர். மூத்த மனைவியின் மகன் தன் குடும்பத்துடன் தனித்து வாழ்கிறான். சட்ட ரீதியாக பிரிக்கப்படாத அப் பூர்வீகச் சொத்தில் தனது பாகத்தை தனக்கு பிரித்துக் கொடுக்கும்படி தன் தந்தையை கேட்கிறான்.

முன்னர் குறிப்பிட்ட சகோதரர்களுக்குள் சட்டரீதியாக பிரிபடாத மேற்படி பூர்வீக சொத்தில் தனது பாகத்தை கேட்பதற்கு அவனுக்கு பாத்தியதை உண்டா? அது சட்டப்படி செல்லுமா?

பதில்: மூத்த சகோதரரின் முதல் மனைவியின் மகனுக்குக் குடும்ப சொத்தில் ஒரு பாகம் உண்டு. அப் பாகத்தை அவர் இஷ்டப்பட்ட போது பிரித்து எடுத்துக்கொள்ளும் உரிமையும் உண்டு. மனோராஜியாகப் பிரிவினை செய்து கொள்ள முடியாவிட்டால் பாக வியாஜ்ஜியம் செய்து தம் பாகத்தைக் கோர்ட் மூலம் அவர் பிரித்துக்கொள்ளலாம். மூன்று சகோதரர்களுக்கும் பொதுவாக உள்ள மொத்தச் சொத்தில் இவர் தமக்குள்ள 21ல் 1பங்கைக் கேட்கவேண்டுமா; அல்லது தம்முடைய தகப்பனுடைய பாகத்திற்குள்ள 3ல் 1பங்கு சொத்தில் 7ல் 1 பாகம் கேட்கவேண்டுமா என்ற பிரச்னை ஏற்படுகின்றது. மூன்று சகோதரர்களும் பாக பாத்திரம் என்று எழுதிக்கொண்டு அதை ரிஜிஸ்டர்செய்து பட்டா முதலியவைகளை தனித் தனியாக மாற்றி அனுபவிக்காவிட்டாலும் வேறு விதமாகவும் பாகப் பிரிவினை செய்துகொள்ளுவதைச் சட்டம் அனுமதிக்கின்றது. பாகம் செய்துகொள்ளப் பத்திரம் இன்றியமையாததல்ல. வாய் மொழியாகவும் சொத்துக்களைப் பாகப் பிரிவினை செய்துகொள்ளலாம். அதுவும் சட்டரீதியானதே. உண்மையில் அவ்வித பாகம் ஒன்றை இம்மூன்று சகோதரர்களும் ஏற்கனவே செய்துகொண்டுவிட்டால், அதுவும் சட்டரீதியானதுதான். அப்பாக ஏற்பாடானது அந்த சகோதரர்களையும் அவரவருடைய கிளையையும் (அதாவது அவரவருடைய மகன்களையும் பேரன்களையும்) கட்டுப்படுத்தும். அப்படி இருந்தால் முதல் சகோதரருடைய மூத்த மகனானவர், தம்முடைய தகப்பனுடைய பாக சொத்துக்களை மட்டில்கண்டு அதில் தமக்கு 7ல் 1பாகம் கிடைக்க வேண்டுமென்றுதான் தாவா செய்யலாம்.

மூன்று சகோதரர்களும் பாகம் செய்து கொள்ள இஷ்டப்படாமல் ஒரே குடும்பமாக இருந்து வந்தாலும், ஒரு சகோதரருடைய மகன் மட்டில் தமக்குரிய பாகத்தைப்பிரித்து எடுத்துக் கொள்ள இந்த சட்டம் இடம் கொடுக்கின்றது.

'லாட்டரி' டிக்கட் விற்பனையில் மோசடி.

94. கேள்வி: (காதர் மஸ்தான்—பறங்கிப் பேட்டை) ஒரு 'லாட்டரி' கம்பெனி ஏஜண்ட் ஒரு டிக்கட் விலை இருக்கக் கூடுதலாக வசூல் செய்திருக்கிறார்கள், அது தெரிந்து டிக்கட்டுக் குள்ள விலைபோக பாக்கியை அனுப்பும்படி அதிகப்பணம் கொடுத்தவர் எழுதினால் ஏஜண்டானவர் ஷை அதிகத்தொகையை அனுப்பாமலும் பதிலும் இல்லாமலும் இருந்தால், கம்பெனி பேரில் என்ன நடவடிக்கை எடுக்கலாம்.

பதில்: ராஜ்ய சர்க்காரின் அனுமதி பெறுமல் ஒருவர் 'லாட்டரி' (Lottery) நடத்துவதே, இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைக் குறித்த சட்டத்தின் செக்ஷன் 294 A என்ற ஷரத்தின்படி ஒரு குற்றமாகும். அவ்வித லாட்டரிகளுக்கு டிக்கட் விற்பனை செய்வதே மோசடியாகும். அதற்குத்தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். ராஜ்ய சர்க்காரின் அனுமதி பெற்ற லாட்டரியாக இருந்தால், கம்பெனியின் ஏஜண்ட்டானவர் அதிகத் தொகை வசூல் செய்திருந்தால் அதைத் திருப்பி கொடுக்கக் கம்பெனியே ஜவாப்தாரியாவார்கள். கம்பெனி மீது தாவா செய்து அதிகமாக வசூல் செய்யப்பட்ட தொகையை திரும்ப வாங்கலாம்.

நிலச் சீர்திருத்தச் சட்டங்கள். திருவாங்கூர்-கொச்சி மசோதா.

இந்தியாவில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றுவது பற்றி அடிக்கடி காங்கிரஸ் கமிட்டிகளும் பொருப்புள்ள மந்திரிகளும் பிரஸ்தாபம் செய்து வருகின்றனர். திட்டக் கமிஷனும் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சுருக்கமாகத் தெரிவித்திருக்கின்றது. அகில இந்தியாவுக்கும் இது விஷயத்தில் ஒரே மாதிரியான சட்டம் இயற்ற மத்திய பார்லிமெண்ட் சபைக்கு அதிகாரம் இல்லை. நிலச் சீர்திருத்தச் சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரம் ராஜ்ய சட்ட சபைகளிடம்தான் இருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டமானது எப்படி உருவாகுமோ என்று நிலச்சுவான்தார்களும் சரி சாகுபடிதார்களும் சரி எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் நமக்குப் பக்கத்திலுள்ள திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய சர்க்கார் நிலச் சீர்திருத்தம் விஷயமாய் ஏழு மசோதாக்கள் கொண்டு வந்திருக்கின்றனர். இவைகளில் மிக முக்கியமான மசோதா "நிலச் சுவாதீன-சுவான் பாத்தியக் கட்டுப்பாடுச் சட்டம்" (Restriction on Possession and ownership of Land Act 1954.) எனப்படும். இம் மசோதப்படி திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் ஒருவர் சொந்தக்காரர் என்ற முறைமையிலோ குத்தகைதாரர் என்ற முறைமையிலோ கீழே கண்ட அளவுக்கு மேல் விஸ்தீர்ணமுள்ள நிலங்களைத் தம்முடைய சுவாதீனத்தில் வைத்திருக்கக் கூடாது. அதாவது இருபோக நஞ்சை நிலம் அல்லது தென்னந்தோப்பாக இருந்தால் 15 ஏகருக்கு மேலும், ஒருபோக நிலமாக இருந்தால் 22½ ஏகருக்கு மேலும், புஞ்சையாக இருந்தால் 30 ஏகருக்கு மேலும் தம்முடைய அனுபவத்திலோ சுவாதீனத்திலோ வைத்திருக்கக் கூடாது. பலவகைப்பட்ட நிலங்களாக இருந்தால் ஒரு ஏகர் இருபோக நஞ்சை நிலம் அல்லது தென்னந் தோப்பானது 1½ ஏகர் ஒரு போக நிலத்திற்குச் சமமாகவும், 2 ஏகர் புஞ்சை நிலத்திற்குச் சமமாகவும் கணக்குச் செய்யப்படும். தம்பெயராலேயோ, தம்முடைய மனைவி, புருஷன், மக்கள் அல்லது பேரன் பேத்திகள் பெயரிலேயோ இருக்கும் எல்லா நிலமும் சேர்ந்து மேற்கண்ட விஸ்தீர்ணத்திற்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும். மேற்கண்ட விஸ்தீர்ணத்திற்கு மேல் நிலத்தை சுவாதீனம் வைத்திருப்பவர்கள் இம் மசோதா சட்டமாகி அமுலுக்கு வந்த 6 மாத காலத்திற்குள் தம்மிடம் அதிகமாக இருக்கும் நிலம் சொந்த நிலமாக இருந்தால் அதை வேறு நபர்களுக்கு விற்று விட்டாலும் விடலாம். அல்லது குத்தகைக்கு விட்டு விட்டாலும் விடலாம், நிலத்தின் சொந்தக்காரர்கள் கூட மேலே கண்ட விஸ்தீர்ணத்திற்கு மேற்பட்ட அளவு நிலத்தை தம்முடைய சுவாதீனத்தில் வைத்திருக்கக் கூடாது.

மேற்கண்ட விஸ்தீர்ணத்திற்குமேல் குத்தகையாக நிலங்களை வைத்திருப்பவர்களும் அதிகமாக இருக்கும் நிலங்களைப் பற்றி நிலடிரிபுனல் என்ற சபைக்குத் (Land Tribunal) தகவல் கொடுத்து விடவேண்டும். 6 மாதத்திற்குள் விற்பனை அல்லது குத்தகை ஏற்பாடு செய்யாத நிலச் சொந்தக்காரர்களும் இத்தகவலை நிலடிரிபுனலுக்குத் தெரிவித்துவிடவேண்டும். அதிக நிலங்களை அந்த டிரிபுனல் சபையார் நிலமில்லாதவர்களுக்குக் குத்தகைக்கு விடுவார்கள்.

இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு

இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் எவரும் மேலே கண்ட அளவுக்கு மேற்பட்டுத் தம்மிடம் சுவாதீனம் இருக்கும்படி புதிதாக நிலம் வாங்கவும் குத்தகைக்கு ஒப்புக்கொள்ளவும் கூடாதென்று ஒரு ஷரத்து இருக்கின்றது. அதாவது ஏற்கனவே ஒருவரிடம் சொந்தக்காரர் முறைமையிலோ, குத்தகைதார் என்ற முறைமையிலோ, இருக்கும் நிலத்தையும் சேர்த்து புதிதாக வாங்கும் நிலமோ, புதிதாகக் குத்தகைக்கு ஒப்புக்கொள்ளும் நிலமோ மேற்கண்ட அளவுக்கு மேல் இருந்தால் புதிதாக வாங்கிய கிரயசாசனமும், குத்தகையும் செல்லத்தக்கதில்லை. ஒருவர் தாமாக வாங்காமல், வேறு வழியில், அதாவது வார்சு பாத்தியத்திலும் உயில் போன்ற வழியில் அதிக நிலம் வந்து விட்டால், இச்சட்டம் அமுலுக்கு வந்தபோது அதிக நிலமுள்ளவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று கண்டிருக்கிறதோ-இவர்களும் அப்படியே தமக்கு வரும் அதிக நிலத்தின் சுவாதீனத்தை வேறு யாருக்காவது கட்டிக் கழித்து விடவேண்டும். இல்லாவிட்டால் நிலடிரிபுனலார் அப்படிச் செய்து விடுவார்கள்.

ஒருவர் எவ்வளவு விஸ்தீர்ணமுள்ள நிலத்திற்கு மேல் சொந்தக்காரராக இருக்க முடியாது.

இச்சட்டம் அமுலுக்கு வரும்போது ஒருவர் எவ்வளவு விஸ்தீர்ணமுள்ள நிலத்திற்குச் சொந்

தக்காரராக இருந்தபோதிலும் பாதகமில்லே; அவருடைய நிலச்சுவான்பாத்தியம் அவரிட மிருந்து எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. எவ் வளவு அதிகமான நிலத்திற்கு ஒருவர் சொந் தக்காரராக இருந்தாலும் தம்முடைய சுவா தீனத்திலும் அனுபோகத்திலும் மேலே கண்ட அளவுக்கு மேல் அவர் தம்மிடம் வைத்துக் கொள்ளாமல் குத்தகைக்கு விட்டு விடவேண்டும். என்ற கட்டுப்பாடுதான் அவர்களுக்கு. ஆனல் இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு புதிதாக ஒருவர் நிலம் வாங்க ஒரு உச்ச அளவு வைக்கப் பட்டிருக்கிறது. அதவும் மேலே சுவாதீனத் திற்காகக் குறிப்பிடப்பட்ட விஸ்தீர்ணம் தான். அதாவது ஏற்கனவே அவருக்குச் சொந்தமான நிலத்தையும் சேர்த்து மேற்கண்ட உச்ச அளவுக்கு மேலே போகும்படி ஒருவர் புதிதாக நிலம் வாங்க முடியாது. உதாரணமாக இச் சட்டம் அமுலுக்கு வரும்போதே, ஒருவருக்கு இரு போக நிலமாக 20 ஏகர் இருந்தால் அவர் புதிதாக நிலமே வாங்க முடியாது. ஆனல் 5 நபர்களுக்கு மேற்பட்ட குடும்பங்கள் கொஞ்சம் அதிகமான நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கலாம். 5க்கு மேற்பட்ட ஒவ்வொரு நபருக்கும் 1 ஏகர் இருபோக நிலம் அல்லது தென்னந்தோப்பு அல்லது 1½ ஏகர் ஒரு போக நிலம் அல்லது 2 ஏகர் புஞ்சை வீதம் கூட்டிக் கொள்ளலாம். எப்படியும் 25 ஏகர் இருபோக நிலத்திற்கோ அதற்குச் சமமாக மற்ற வகை நிலங்களுக்கோ அதிகமாக இருக்கக் கூடாது. இவ்விதிக்கு முரணுக ஒருவர் புதிதாக நிலம் வாங்கினல் செல்லாது. அது சர்க்காரைச் சேர்ந்து விடும். தாமாக வாங்காமல் வேறு வழியில் நிலம் கிடைத்தவர்களும் 6 மாதத்திற் குள் உபரி நிலத்தை விற்று விடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவை சர்க்காரைச் சேர்ந்தவையாகும். ஆனல் நிலத்திற்குச் சர்க் கார் நஷ்ட ஈடு கொடுப்பார்கள். நஷ்ட ஈடு என்பது நியாயக் குத்தகையைப் போல் 16⅔ மடங்கு இருக்கும். நியாயக் குத்தகை எவ்வளவு என்பதைப்பற்றி ஒரு தனி மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன்படி மொத்த மகசூ லில் 4ல் 1 பங்குதான் நியாயக் குத்தகையாகும்.

இச்சட்ட ஷரத்து எதற்கு முரணுக நடந்தா லும் அவ்வித முரண்பாடு நீடிக்கும ஒவ்வொரு நாளுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ 100 விதம் அப ராதமும் விதிக்கப்படலாமென்றும் ஒரு ஷரத்து இருக்கிறது.

இவைதான் திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய சர்க்கார் கொண்டு வந்திருக்கும் மசோதாவின் முக்கிய ஷரத்துக்கள். இதை வைத்துக் கொண்டு சென்னைச் சட்டம் ஒன்று வந்தால் அது எப்படி இருக்கும் என்று நீங்களே ஊகித் துக் கொள்ளவேண்டியது. ஆனல் திருவாங்கூர் ராஜ்யத்திற்கும் சென்னை ராஜ்யத்திற்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. திருவாங்கூரி லிருப்பது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மந்திரி சபை அல்ல. இருந்தாலும் பிரஜா-சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த திருவாங்கூர்-கொச்சி மந்திரிசபையானது காங்கிரஸ் கட்சியின் தய வாலும் பலத்தாலும்தான் அங்கே நீடித்திருக் கிறது என்பதும் கவனிக்கத்தக்கது. திருவாங் கூர் கொச்சி ராஜ்யத்தில் தமிழ் நாட்டை விட ஜனநெருக்கடி அதிகம்; வீதாசாரமான நிலமும் அங்கே குறைவு. மேலும் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்துக்களுக்கு இம் மசோ தாவின் பல ஷரத்துக்கள் முரணுக இருப்ப தாகவே தோன்றுகிறது. சென்னை ராஜ்யத்தற்கு நிலச் சீர்திருத்தங்களைப்பற்றி சட்டம் ஒன்று வந்தால் அது வேறு தினுசாகவே இருக்கலாம்.

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும். வினு-விடை

ஆசிரியர்

K. ஸ்ரீநிவாஸன் M. A.

(தஞ்ச ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

1932ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும், 1934ஆம் வருடத்திய நில அடமான பாங்கிகள் பற்றிய சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் வினு-விடை முறையில் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், மெம்பர்களும் கட்டாயமாக வைத்துக் கொள்ளவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று.

விலை ரூ. 1—8—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:— K. சீனுவாசன் M. A.

ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழகம், தஞ்சாவூர்.

சென்ற இதழ் தொடர்ச்சி

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

K. ஸ்ரீநிவாஸன், M. A.
(தஞ்சை ஹூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

ஒரு சங்கத்தைக் கலைப்பது.

சங்கம் சரியாக வேலை செய்யவில்லையென்றும், மேற்கொண்டு அதை சரிவர வேலை செய்யும்படிச் செய்ய முடியாதென்றும் ரிஜிஸ்திரார் கருதும் சந்தர்ப்பத்தில் அதன் பதிவை செக்ஷன் 44 [1] படி ரத்து செய்வதையே சங்கத்தைக் கலைப்பது என்று கூறுவர்.

ரிஜிஸ்திரார் சங்கம் சரியாக வேலைசெய்யவில்லை என்று கருது முன்பு அதன் விவகாரங்களை செக்ஷன் 38 படி அல்லது செக்ஷன் 39 படி விசாரித்தறிந்திருக்க வேண்டும். அந்த விசாரணையின் நகலையும் அதன்மீது தாம் எடுத்துள்ள கலைப்பு நடவடிக்கையையும் ரிஜிஸ்திரார் சங்க நிர்வாகி அல்லது நிர்வாகிகளுக்கு ரிஜிஸ்தர் தபாலில் எழுதி அனுப்ப வேண்டும்.

சங்கத்தை நிர்வகிப்பவர் மகாசபையைக் கூட்டி அந்தத் தகவலை மெம்பர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். தகவலை அறிந்த எந்த மெம்பரும் உத்திரவு தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் ரிஜிஸ்திராரின் கலைப்பு உத்திரவை ஆட்சேபித்து ராஜ்ய சர்க்காருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

மெம்பர்கள் ஆட்சேபனை எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில் ரிஜிஸ்திராரின் கலைப்பு உத்திரவு, உத்திரவு தேதிமுதல் இரண்டு மாதங்கள் கழித்து அமுலுக்கு வரும். ஆட்சேபனை எழுந்த சந்தர்ப்பத்தில் அந்த உத்திரவு சர்க்காரால் உறுதி செய்யப்பட்டு, சர்க்காரின் பதில் மனுதாருக்கு அனுப்பப்பட்டவுடன் அமுலுக்கு வரும்.

சரியாக வேலைசெய்து வரும் சங்கம் கூட கலைக்கப் படலமா?

செக்ஷன் 44 [1] படி ஒரு சங்கத்தின் முக்கால் பங்கு அங்கத்தினர்கள் சங்கம் தங்களுக்கு மேற்கொண்டு தேவையில்லையென்று கருதி சங்கத்தைக் கலைத்து விடும்படி கோரிக்கொண்டால் ரிஜிஸ்திரார் அவர்கள் கோரிக்கைப்படி சங்கத்தைக் கலைக்கலாம்.

தவிர, தனி நபர்கள் சேர்ந்துள்ள ஒரு சங்கத்தின் அங்கத்தினர்கள் பத்துக்குக் குறைவாக ஆகிவிட்டாலும் ரிஜிஸ்திரார் அந்த சங்கத்தைக் கலைத்து செக்ஷன் 45 படி அதன் பதிவை ரத்து செய்யலாம்.

ஒரு சங்கத்தின் பதிவு ரத்து செய்யப்பட்டால் ஏற்படும் விளைவுகள்.

1. பதிவு-ரத்து உத்திரவு (Cancellation Order) அமுல் செய்யப்பட்ட தேதி முதல் சங்கம் கலைக்கப்பட்டு அது மேற்கொண்டு சட்டரீதியான ஆசாமியாக [legal person] இல்லாமல் போய்விடும்.

2. சங்கத்திற்கு வரவேண்டிய ஆஸ்திகள் யாவையும் செக்ஷன் 47 (1) படி ரிஜிஸ்திராரால் நியமிக்கப்படும் லிக்விடேடர் (Liquidator) வசமாகிவிடும்.

3. சங்கம் கலைக்கப்பட்ட காரணத்தால் அதன் மீதுள்ள எல்லா தாவாக்களும் நிறுத்தப்பட்டு அவை லிக்விடேடர் முன்பு, ருசுப்பிக்கப் படவேண்டும். சங்கத்தின்மீது சிவில் கோர்ட்டில் ரிஜிஸ்திரார் சம்மதியின்றி புது தாவா எதுவும் செய்ய முடியாது.

செக்ஷன் 47 [1] படி நியமிக்கப்படும் லிக்விடேடரின் பொறுப்புகள். அவருக்குள்ள அதிகாரங்கள்.

செக்ஷன் 47 [1] படி நியமிக்கப்படும் லிக்விடேடரின் முக்கியப் பொறுப்பு i. சங்கத்திற்கு வரவேண்டியதாயுள்ள ஆஸ்திகளை வசூலித்து சங்கம் கொடுக்க வேண்டியுள்ளவர்களுக்குப் பூராவாகவோ விதாசரமாகவோ தொகைகளைக் கொடுப்பது ii. வெளியாருக்குக் கொடுக்க வேண்டிய தொகைகள் பூராவும் கொடுக்கப்பட்ட பின்பு மிகுதியுள்ள தொகையை சட்டப்படி வினியோகம் செய்ய ஏற்பாடு செய்வது என்பவை.

லிக்விடேடர் மேற்சொன்ன பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டி அவருக்குக் கீழ்க்கண்ட அதிகாரங்கள் செக்ஷன் 47 [3] படி கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை அவர் ரிஜிஸ்திராரின் மேலதிகாரத்திற்கு உட்பட்டு செலுத்தி வருவார்.

1. பாக்கிகளை வசூலிக்க அவசியமான தாவா, நிறைவேற்று நடவடிக்கைகளை எடுத்தல்; அது சம்பந்தமான உத்திரவுகளைப் பிறப்பித்தல்.

2. சங்கத்தின்மீது தொடரப்படும் வழக்குகளில் எதிர்வாதம் செய்தல்.

3. சங்கம் கொடுக்க வேண்டிய இனங்களை விசாரித்து ஒப்புக் கொள்ளுதல்.

4. சங்க வசமுள்ள சொத்துக்களை விற்று ரொக்கமாக்குதல்.

5. சங்கத்தின் கலைப்புத் தேதியில் இருந்த மெம்பர்கள், அதற்கு முன் இரண்டு வருஷங்களுக்குள் நீங்கிய மெம்பர்கள் அல்லது அவர்களின் வாரிசுகள், சங்க உத்தியோகஸ்தர்கள் இவர்கள் கொடுக்க வேண்டிய பகுதியை (contribution) தீர்மானித்தல்.

6. சங்கம் கொடுக்கவேண்டிய இனங்களைப் பூராவாகவோ அல்லது விகிதாசாரமாகவோ கொடுத்தல்.

7. சங்கத்தின் இறுதி மிச்சத்தை சட்டப்படி வினியோகித்தல்.

இக் கடமைகளை லிக்விடேடர் நிறைவாகச் செய்யும் பொருட்டு அவசியமான மெம்பர்களையும, அவர்கள் மூலம் பாத்தியம் கொண்டாடுபவர்களையும் அது சம்பந்தமான சாட்சிகளையும், அவர்கள் வசமுள்ள தாவா சம்பந்தமான தஸ்தாவேஜிகள், சங்க ரிகார்டுகளை ஆஜர் செய்யும்படி சம்மன் பிறப்பிக்க ஒரு சிவில் கோர்ட்டுக்குள்ள அதிகாரம் இந்த லிக்விடேடருக்கு செக்ஷன் 47 (4) படி கொடுக்கப்பட்டுள்ளது.

தவிர, இவர் கலைக்கப்பட்ட சங்கத்திற்கு வரவேண்டிய பாக்கிகளை ரெவின்யூ பாக்கியைப் போல் பாவித்து வசூலித்துத் தரும்படி ஜில்லா கலெக்டருக்கு செக்ஷன் 47 (5) படி மனுச் செய்து கொள்ளலாம்.

லிக்விடேடரின் உத்திரவை ஆட்சேபிக்க உரிமை.

உத்திரவால் பாதிக்கப்படும் எவரும் லிக்விடேடரின் உத்திரவு பிறந்த தேதி முதல் இரண்டு மாதங்களுக்குள், அந்த உத்திரவை ஆட்சேபித்து ரிஜிஸ்திராருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். சாதாரணமாக லிக்விடேடரின் உத்திரவை ஆட்சேபித்து சிவில் கோர்ட்டுக்குப் போக முடியாது.

லிக்விடேடரின் உத்திரவு விஷயத்தில் எந்த சந்தர்ப்பங்களில் சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு?

1. ஒருவர் மெம்பரா என்பது பற்றிய லிக்விடேடரின் உத்திரவை ஆட்சேபித்து மனுதார் சிவில் கோர்ட்டில் மனுக்கொடுத்தாலும்.

2. ஒரு தீர்ப்பை நிறைவேற்றும்படி லிக்விடேடர் சிவில் கோர்ட்டைக் கோரும்போது, பிரதிவாதி தீர்ப்பின் நியாயத்தை எதிர்த்தாலும் சிவில் கோர்ட் அவைமீது தீர்ப்புக்கூற அதிகாரம் உண்டு.

ஒரு கூட்டுறவுச் சங்கம் மெம்பர்மீது சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாமா?

கூடாது. செக்ஷன் 51 சங்கவேலை சம்பந்தமான எல்லா வழக்குகளையும் சங்கம் ரிஜிஸ்திராரிடம் தீர்ப்புக்கு விடவேண்டும் என்று திட்டமாகக் கூறுகிறது.

சங்கத்தின் தற்சமய மெம்பர், இறந்த மெம்பர், அவர் வாரிசு, கமிட்டி மெம்பர், சங்க உத்தியோகஸ்தர், மற்றொரு சங்கம் இவைகளுக்கும் சங்கத்திற்கும் ஏற்படும் எல்லா வழக்குகளும் சங்கவேலை பற்றிய வழக்குகளே ஆகும்.

ரிஜிஸ்திராரிடம் செக்ஷன் 51 படி தாவா செய்யும் முறை

i இது ஒரு ரூல் XVல் விவரிக்கப்பட்டுள்ளது. அதன்படி வாதி தமது தாவாவை ரிஜிஸ்திராருக்கு அதற்கென ஏற்பட்டுள்ள நமூனுவில் மனுக்கொள்ள வேண்டும். தாவாத் தொகை காலாவதியானதாய் இருக்கக்கூடாது.

ii சிப்பந்திகள், கமிட்டி மெம்பர்கள், இதர சங்கஉத்தியோகஸ்தர்களின் வேலைக்குறைவால் ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கான தாவாவை சங்கம் நஷ்டம் ஏற்பட்ட இரண்டு ஆண்டுகள் முடிவதற்குள் தாக்கல் செய்யவேண்டும்.

தாவாவை ரிஜிஸ்திரார் என்ன செய்வார்?

ரிஜிஸ்திரார் தாவா மனுவை

1. தாமே நேரிட விசாரிக்கலாம்; அல்லது

2. இதற்கென சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியிடம் விசாரணைக்கு அனுப்பலாம்; அல்லது

3. ஒன்றிற்கதிகமான ஆர்பிட்ரேடர்களிடம் விசாரணைக்கு அனுப்பி வைக்கலாம்.

இப்படி அனுப்பப்பட்ட மனுவை ரிஜிஸ்திரார் எப்பொழுது வேண்டுமானாலும் திருப்பிப் பெற்று தாமே விசாரிக்கலாம்.

தாவா செய்யப்பட்ட தகவல் அறிந்து பிரதிவாதி தனது சொத்தை மறைக்கவும் பராதீனம் செய்யவும் முயன்றால் சங்கம் என்ன செய்யமுடியும்?

அந்த சந்தர்ப்பத்தில் வாதி, ரிஜிஸ்திராரிடம் பிரதிவாதியின் ஜங்கம சொத்துக்களை தீர்ப்புக்கு முன்பே ஜப்தி (Attach) செய்யும்படி உத்திரவு வாங்கிவிடலாம். இந்த ஜப்தி சிவில் கோர்ட்டு ஜப்தியைப் போலவே செல்லுபடியுள்ளது. 51(4)

இது விஷயமாக ரிஜிஸ்திரார் கட்டாயம் வாதியின் கோரிக்கையை தீர கவனிப்பார். பிரதிவாதி தகுந்த ஜாமீன் கொடுத்தால் மட்டும் ஜப்தியை விடுவிப்பார்.

187733

ஆர்பிட்ரேஷன் தீர்ப்புகள் முடிவானவைதானா?

ரிஜிஸ்திரார் தாமே 51 [2a] படி செய்யும் தீர்ப்பு முடிவானது. அதை எந்த சிவில் கோர்ட்டும், ரிவினியூ கோர்ட்டும் ஆட்சேபிக்க கூடாது.

51 (2) b, c படி பிறர் விசாரித்துச் செய்யும் தீர்ப்புகளை ரிஜிஸ்திரார் 51[5] படி தாமாக அல்லது பார்ட்டியின் கோரிக்கை பேரில் விசாரித்து மாற்றலாம். மற்றபடி சிவில் கோர்ட்டு, ரிவினியூ கோர்ட்டு எதவும் ஆர்பிட்ரேஷன் தீர்ப்பை மாற்றமுடியாது.

ஒரு சங்கம், மாஜி டைரக்டர் மீது, அவர் கடமையில் தவறியதால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு தாவா செய்யலாம்.

சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். ரிஜிஸ்திராரிடம் செய்ய முடியாது.

ரிஜிஸ்திரார் அல்லது ஆர்பிட்ரேடர் இறந்த அங்கத்தினரின் வாரிசைக் கட்டுப்படுத்தி தீர்ப்பு செய்யலாமா?

வாரிசு நபரைக் கட்டுப்படுத்த முடியாது; அவர் வசமிருக்கும் இறந்தவரின் சொத்துகளைக் கட்டுப்படுத்தி தீர்ப்புச் செய்யலாம்.

ஆர்பிட்ரேடர் தீர்ப்பை வாதி சங்கம் எப்படி நிறைவேற்றும்?

1. வாதி சங்கம் தீர்ப்பை 57A படி வசூலித்துத் தரும்படி கூட்டுறவு ஜில்லா ரிஜிஸ்திரார் கோர்ட்டில் தாக்கல் செய்யலாம். அல்லது

2. சிவில் கோர்ட்டு மூலம் வசூலித்துக் கொள்ளலாம்.

கூட்டுறவு ஜில்லா ரிஜிஸ்திராரின் கோர்ட்டு எல்லா வகைகளிலும் சிக்கனமும் சவுகரியமுமானதால் சங்கம் அவசியமின்றி சிவில் கோர்ட்டுக்குப்போவது கூடாது. சிறிய தொகைக்கான தீர்ப்புகளை கிராம கோர்ட்டுகள் மூலம் நிறைவேற்றிக்கொள்ளலாம்,

கூட்டுறவு ரிஜிஸ்திராரிடம் எந்தெந்த விஷயங்களைப்பற்றி தாவா செய்து கொள்ளலாம்?

ரிஜிஸ்திராரிடம் கீழ்கண்ட விஷயங்களைப் பற்றி தாவா செய்து கொள்ளலாம்.

1. ஒரு சங்கத்திற்கும் மெம்பருக்கும் ஏற்படும் வழக்கு.

2. ஒரு சங்கத்தின் கமிட்டி அல்லது பழைய கமிட்டிக்கும், உத்தியோகஸ்தர்களுக்குமிடையே ஏற்படும் வழக்கு.

3. சிப்பந்திகள் பற்றிய பண தாவா.

4. ஒரு சங்கத்திற்கும் மற்றொரு சங்கத்திற்கும் ஏற்படும் வழக்கு. ரிஜிஸ்திராரிடம் செய்யப்படும் தாவா, சங்கத்தின் நிர்வாகம் தேர்தல் பற்றியதாக இருக்கலாம்; அல்லது, சேர வேண்டிய பாக்கிக்கான பண தாவாவாய் இருக்கலாம். நிர்வாகம் பற்றிய தாவாவிற்குக் கட்டணம் ரூ. 50. ரூ. 150க்கு மேற்பட்ட பண தாவாவிற்குக் கட்டணம் ரூ. 1—0—0.

சங்கக் கமிட்டி மீது சிப்பந்திகளின் அபராதம், சஸ்பெண்ட், டிஸ்மிஸ் பற்றிய தாவாக்களை ரிஜிஸ்திரார் ஏற்றுக்கொள்ளமாட்டார். சிப்பந்திகள் அவசியம் என்று கருதினால் சிவில் கோர்ட்டில்தான் தாவா செய்யவேண்டும். (செக்ஷன் 51.)

ஆர்பிட்ரேஷன் தாவாக்களை யார் விசாரிக்கலாம்? தீர்ப்புகளில் ஏற்படும் தவறுகளைத் திருத்துவது எப்படி?

1. செக்ஷன் 51படி அனுப்பப்படும் ஆர்பிட்ரேஷன் தாவாக்களை ரிஜிஸ்திரார் தாமாகவே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம்; அல்லது

2. ஒன்று அல்லது மூன்று ஆர்பிட்ரேடர் (மத்யஸ்தர்)களிடம் விசாரணைக்கு அனுப்பலாம். அல்லது;

3. இதுபற்றி விசாரிக்க அதிகாரமுள்ள ஒரு அதிகாரியிடமும் (Territorial Inspector) அனுப்பிவைக்கலாம்.

எந்த சமயத்திலும் ஆர்பிட்ரேடரிடம் அனுப்பப்பட்ட தாவாவை ரிஜிஸதிரார் திரும்பிப்பெற்று தானாக விசாரிக்கலாம்: அல்லது வேறு ஆர்பிட்ரேடரிடம் அனுப்பலாம்.

5. தீர்ப்புகளில் தவறு காணப்பட்டால் அதை ரிஜிஸ்திரார் தான் திருத்தலாம். ரிஜிஸ்திரார் தீர்ப்புகளை தானாகவும், ஆர்பிட்ரேடர் கோரிக்கொண்டாலும், வாதி பிரதிவாதிகளின் மனுவின் பேரிலும் விசாரித்துத் திருத்தலாம். செக்ஷன் 51 (5)

6. ஆர்பிட்ரேடரின் தீர்ப்பு முடிவானது. அதை எந்தக் கோர்ட்டும் ஆட்சேபிக்கமுடியாது.

தொடரும்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM. FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற

—: அறந்தாங்கி :—

786 சங்கு சோப்பை

வாங்கி உபயோகியுங்கள்

கட்டி 1-க்கு அணா 0-1-3தான்

தயாரிப்பவர்:—

இ. கா. ரு. மு. காதர் நயினா முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.

நற்சான்று

K. S. N. பெரியதம்பி நாடார், பட்டிவீரன்பட்டி.

ஹெர்ணியா கியூர்:- இம்மருந்தை 12-11-47ல் வரவழைத்து 27-12-47 முதல 29-12-47 வரை 3 நாளும், 1-1-48 முதல் 3-1-48 வரை 3 நாளும் காலை மாலை இருவேளையுமாய் சாப்பிட்டதில் எனது வலது பக்கத்து விலாவரிச்சி எலும்புகளிலிருந்து வலியையும் குடல் வாதத்திற்காக 1929ல் வலப்பக்க மர்ம ஸ்தானத்தில் ஆப்ரேஷனாகி இருந்தும், இப்போது 2 வருஷமாக இருந்த குடலின் வலி, அண்டத்தின் பீஜவலி, இரைச்சல், எப்பம் முதலியவை குணமாகி திடமான பலத்தை அடைந்திருக்கிறேன். இத் தமிழ் மருந்தை உற்பத்தி செய்பவர் போற்றத்தக்க ஓர் சிறந்த வைத்தியரே. இதை நமக்கு கும்பகோணம் ஜெயராம் வைத்தியசாலையிலிருந்து கிடைக்கப்பெற்றோம்.

(ஒப்பம்) K. S. N. பெரியதம்பி நாடார்,
டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்,
எக்ஸ் பிரசிடெண்ட், அய்யம்பாளையம் பஞ்சாயத்து போர்டு,
சேவுகம்பட்டி கிராம பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்ட்.

'ஜெயராம்' ஹெர்ணியா கியூர்

குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள்

3-தினத்தில் குணம் தெரியும்

எலிமெண்டரி கேஸ் ரூ. 6—0—0 செகண்டரி கேஸ் ரூ. 11—0—0
அட்வான்ஸ் கேஸ் ரூ. 25—0—0

குறிப்பு:—ஆர்டருடன் முன்பணம் வரவேண்டும். (உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்)

G. ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ..

கும்பகோணம்

பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்கு குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகர்

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

For Coimbatore, Palghat & Nilgiris.

B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
COIMBATORE.